760

ஜகன்மோகினி

ஆசிரியை :
வை. மு. கோதைநாயகி

○

நமது
அச்சாலயத்தை விஜயதசமியன்று
கனம் பிரதம மந்திரி
ஸ்ரீமான்
ஸி. ராஜகோபாலாசாரியார்
திறந்து வைத்தபோது
எடுத்த படம்

படத்திலிருப்பவர்கள் :—ஸ்ரீமான்கள் ஏ. கே. மாணிக்க முதலியார், ராவ் பகதூர் ப. சம்பந்த முதலியார், எஸ். சத்தியமூர்த்தி, ராஜாஜி, வை. மு. பார்த்தசாரதி, ஸ்ரீமதி வை.மு. கோதைநாயகி, வை. மு. ஸ்ரீனிவாஸன்.

நவம்பர் 1937

சந்திரமண்டலம்
(தொடர்ச்சி)

அணா 2

புரந்தரதாஸ்

(தமிழ்)



'பாரகான்' டாக்கிஸில் 6-11-37 முதல் ஆரம்பம்

1-11-37 முதல் ஆரம்பமாகுமிடங்கள் :—

ஓரியண்டல் டாக்கீஸ்	—	சேலம்
கர்நாடிக் டாக்கீஸ்	—	ஈரோடு
அண்ணாமலை டாக்கீஸ்	—	கோட்டையூர்
வாணி டாக்கீஸ் (கன்னடம்)	—	சிக்பல்லாபூர்
நியூ ஓரியண்டல் ,,	—	சேலம்

பெங்களூர் "சாகர" டாக்கிஸில் திரளான ஜனங்கள்
3 வாரமாகக் கண்டு களிக்கின்றனர்

விவரங்களுக்கு எழுதவும் :—

தேவி பிலிம்ஸ் லிமிடெட்,
45, தங்கசாலை, சென்னை.

OF THE REGISTRAR
9-FEB
MADRAS

ஸ்ரீராமஜெயம்

ஜகன்மோகினி

**ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு**

—திருவள்ளுவர்.

**ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து**

—ஸ்ரீ வீரராகவ கவி.

மலர் 14	ஈச்வர ௵ ஐப்பசி ௴ நவம்பர் **1937**	இதழ் 11

ஆய கலைக ளறுப்த்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை—தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கமலா சனத்தேவி செஞ்சொற்
றூர்தந்த வென்மனத் தாமரையாட்டிசரோருகமேற்
பார்தந்த நாதனிசை தந்தவாரணப் பங்கயத்தாள்
வார்தந்த சோதியம்போருகத்தாளை வணங்குதுமே.

பெருந்திருவுஞ் சயமங்கையு மாகியென் பேதைநெஞ்சி
லிருந்தருளுஞ் செஞ்சொல் வஞ்சியைப்போற்றி லெல்லாவுயிர்க்
பொருந்திய ஞானந்தருமின்ப வேதப் பொருளுந்தருங் [கும்
திருந்திய செல்வந் தருமழியாப் பெருஞ் சீர்தருமே.

—சரஸ்வதியந்தாதி

நம் வாசகர்கட்கு சந்தோஷச் செய்தி

"ஜகன்மோகினி" அச்சாலயத் திறப்பு விழா

கனம் பிரதம மந்திரி
ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார் திறந்து வைத்தார்

பல தொழில்களுக்கும் ஜயத்தைக் கொடுக்கும் சுப தினமாகிய விஜயதசமி யன்று (14-10-37) மாலை 5-மணிக்கு நம் ஜகன்மோகினி காரியாலயம் "ஸ்ரீ கோகுலநாத்" கட்டிடத்தில் பிரதம மந்திரி ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாரவர்கள் ஜகன்மோகினி அச்சாலயத்தை பொதுஜன சேவையிலும், இலக்கிய சேவையிலும், பத்திரிகைத் தொழிலிலும் ஈடுபட்டுள்ள பல பிரமுகர்களின் முன்னிலையில் மனமுவந்து ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்துக்கொடுத்தார்.

அவ்வமயம் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார், நெல்ஸன் கம்பெனி மாணிக்க முதலியார், ஆனந்தவிகடன் ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி, யுனைடெட் ஆர்டிஸ்ட் கார்ப்பொரேஷன் கே. பி. வத்ஸல், டி. எஸ். வெங்கடேச அய்யர், கே. பாஷ்யம், பி. ஜகந்நாத தாஸ், தினமணி உதவி ஆசிரியரும், பிரபல சினிமா விமர்சகருமான ந. ராமரத்தினம், எஸ். ஜி. அய்யர், பி.ஆர். நாராயணன், ஜுபிடர் பிக்சர்ஸ், ஒலிம்பிக் பிக்சர்ஸ் முதலாளிகள், நம் சித்திரக்காரர்களான ஆர். வி. ராமன், "ரவி" முதலியவர்களும், பல அச்சாபீஸார்களும், சென்னையில் பிரபல புத்தக வியாபாரிகளும், இன்னும் பல பிரமுகர்களும் விஜயம் செய்தார்கள்.

நம் "மோகினி" கட்டிடம் முழுதும் தேசியக் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வாத்திய கோஷம் முழங்குகையில் ஸ்ரீ. ராஜாஜி பிரவேசித்தார்.

முதலில் "வந்தே மாதர கீதம்" நமது ஆசிரியையால் பாடப்பட்டது. பிறகு அவர் பிரதம மந்திரியை திறந்து வைக்கும்படி வேண்டிக்கொண்டபோது பேசியதன் சுருக்கமாவது:—

"என்னுடைய வாழ்நாளிலேயே இன்று ஓர் பெரிய சுதினமென்று சொல்லலாம். நான் விளையாட்டாக ஆரம்பித்த இந்த ஜகன்மோகினி பத்திரிகை கடவுளின் கிருபா கடாக்ஷத்தினாலும், பெரியாரின் ஆசீர்வாதத்தினாலும், பொதுஜனங்களின் பேராதரவினாலும், பதினன்கு ஆண்டுகளாக விருத்தியடைந்து

கொண்டே வந்து, இதற்கென ஒரு சிறு அச்சாலயம் அமைத்துக்கொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அபாரமான தேசீய வேலைகளில் ஈடுபட்டிருக்கும் பெரியார் இச்சிறு காரியத்தை மதித்து அடியாளின் வேண்டுகோளுக்கிணங்கி ஆசீர்வதிக்க ஒப்புக்கொண்டது நாங்கள் செய்த பாக்கியமே யாகும்.....விதுரரின் குடிசையை மதித்து விஜயம் செய்த ஸ்ரீ கண்ணபிரானின் சரிதையே என் ஞாபகத்திற்கு வருகிறது.....நான் வழிபடும் கடவுள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே யாகும்; அப்பெருமானின் திருநாமமாகிய ராஜகோபாலனென்ற பெயர்கொண்ட இப்பெரியாரின் ஆசீர்வாதமே எனது இச்சிறிய காரியத்துக்கு மகத்தான ஜெயத்தைக் கொடுக்குமென்ற நம்பிக்கையுடன் இந்த அச்சாலயத்தைத் திறந்து கொடுக்கும்படியாக அவரை வேண்டிக் கொள்கிறேன்."

கரகோஷத்தினிடையே ராஜாஜி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"அளவு கடந்த சந்தோஷத்தினால் ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் என்னைப்பற்றி அதிகமாகச் சொல்லிவிட்டார்கள். இத்தனை ஆண்டுகளாக வளர்ந்து வரும் இந்த ஜகன்மோகினி நல்ல யுக்த வயதை யடைந்திருக்கிறது....என்றும் சிரஞ்சீவியாக இருக்கவேண்டுமென்று கடவுளை வேண்டி, என் சார்பாகவும், இங்குக் கூடியுள்ளோரின் சார்பாகவும் ஆசீர்வாதத்தைத் தெரிவித்து, இந்த அச்சாலயத்தைத் திறந்து வைக்கின்றேன்."

பிறகு அவர் கம்போஸ் செய்யும் கூடத்திற்குச் சென்று அக்ஷதைகள் போட்டுத் தாமே "ஸ்ரீராமஜெயம்" என்ற எழுத்துக்களை கம்போஸ் செய்து, நமது ஆசிரியை தம்பதிகளை ஆசீர்வதித்தார். பின்னர் யந்திர அறைக்குச் சென்று, தாமே அதைக் கொஞ்சம் சுற்றினார். அந்த காட்சி அவரது தூய்மையான ஹ்ருதயத்தின் போக்கை பளிச்சென்று காட்டியது. பாரதமாதாவின் அருளால் அபார ஜெயமே கிடைக்குமென்று வாழ்த்துக்கூறி அங்கும் அக்ஷதை போட்டார்.

எல்லோருக்கும் சந்தனம், தாம்பூலம் முதலியவை வழங்கப்பட்ட பின்னர், இத்தினத்தின் ஞாபகார்த்தமாக ஸ்ரீமான் ராஜாஜிக்கு ஒரு வெள்ளி சர்க்கா சமர்ப்பிக்கப்பட்டது.

18342

வெளி நாட்டுச் செய்திகள்

—:(o):—

சீன - ஜப்பானிய யுத்தம் ஒரு மாதத்து நிலைமை

சென்ற ஒரு மாதத்தில் ஜப்பானியர் பீபிங்-காங்கோ ரயில் பிரதேசத்தில் டின்ட்ஸின்-பூகோ பிரதேசத்தில் 100 மைல் முன்னேறியுள்ளனர். ஆதலால் பீபிங்குக்குத் தெற்கே 40000 சதுர மைலில் ஜப்பானிய ராணுவ ஆதிக்கம் வியாபித்திருக்கிறது.

மனச்சாட்சி ஆதிக்கம்

அமெரிக்க குடியரசுத் தலைவர் ஸ்ரீ. ரூஸ்வெல்ட் ரேடியோ மூலம் அமெரிக்க மக்களுக்கு ஒரு செய்தி விடுத்தார்.

"மிருக பலத்தை விட, மனச்சாட்சியே ஆதிக்கமுள்ளதாக இருக்க வேண்டும்" என்பது சமூக தர்மம்.

"இதே கொள்கை, உலகத்து சர்க்கார்களிலும் ஏற்பட்டு, மிருக பலத்துக்குப் பதிலாக, சுதந்தரத்தின் ஆதிக்கம் ஸ்தாபிக்கப்படவேண்டும்"

"இந்த தர்மத்தை நிலை நாட்ட அமெரிக்க மக்கள் சங்கற்பம் செய்து கொண்டு விட்டார்கள்" என்று அவர் கூறினர்.

எகிப்தின் அரசியல் சுதந்தர அடையாளம்

எகிப்து அரசியல் சுதந்தரம் பெற்றதற்கறிகுறியாக ஒரு முக்கியமான சடங்கு நடைபெற்றது.

இங்குள்ள பிரிட்டிஷ் ராணுவத் தலைமை காரியாலயத்தில் சென்ற 50 வருஷ காலமாக பிரிட்டிஷ் கொடி (யூனியன் ஜாக்) பறந்துகொண்டிருந்தது.

அதே இடத்தில் இன்று எகிப்திய பிரதம மந்திரி நஹாஸ் பாஷா எகிப்திய தேசியக் கொடியை உயர்த்தினர். இந்தக் கட்டிடம் சமீபத்தில் எகிப்துக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி எகிப்திய சர்க்காரிடம் இன்று ஒப்படைக்கப்படுகிறது.

நஹாஸ் பாஷா தேசியக் கொடியை இக்கட்டிடத்தின்மீது பறக்கவிட்டபோது, எகிப்திய தேசிய கீதமும், பிரிட்டிஷ் தேசிய கீதமும் முழங்கின.

லண்டனில் விஷ்ணு விக்கிரஹம்

ஸ்ரீ. கோஸ்வாமி கண்டெடுத்தார்

லண்டனில் பண்டித கோஸ்வாமி ஒரு தங்க விஷ்ணு விக்கிரகத்தைக் கண்டெடுத்தது பற்றி இங்கு மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. கௌடிய மிஷன் லண்டன் பிரதிநிதியான மஹாமஹோபதேசக பண்டித கோஸ்வாமி சமீபத்தில் இந்த விக்கிரஹத்தை சொப்பனத்தில் கண்டாராம். மறுநாள் கென்ஸிங்டனில் ஒரு புதருக்குப் பக்கத்தில் அந்த விக்கிரஹத்தைக் கண்டார். லண்டனிலுள்ள கௌடிய மடத்து கோவிலில் இந்த விக்கிரஹத்தை பிரதிஷ்டை செய்ய அவர் உத்தேசித்திருக்கிறுர். திருபுர மகாராஜாவின் உதவி கொண்டு இந்த மடம் கட்டப்பட்டது.

தனக்கொன்று: பிறருக்கு வேறு நியாயம்

"இந்திய சணல் பொருட்கள் அதிகமாக இறக்குமதியானல் இங்கு தொழிலாளருக்கு வேலேயில்லாக் கஷ்டம் ஏற்படும்" என்று ஸ்காட்லண்டு தேசத்து முதலாளிகள் கிளர்ச்சி செய்கிறுர்கள். இந்தியர்கள் அம்மாதிரி கிளர்ச்சி செய்தால்?

மரண வரியால் ஏழை மக்களுக்கு லாபம்

இங்கிலாந்தில் காலஞ்சென்ற ஸர் கேர்வேஸ் பேகீநட்டின் சொத்தான 10 லக்ஷத்து 11 ஆயிரம் பவுனுக்கு 4 லக்ஷம் பவுன் மரண வரியாக விதிக்கப்பட்டது. இம்மாதிரி வரி நமது நாட்டிலும் ஏற்பட்டால் ஏழைகளின் வரியைக் குறைக்கவும், பொதுஜனங்களுக்கு மிகவும் அவசியமான வழிகளில் செலவழிக்கவும் பணம் ஏராளமாகக் கிடைக்கும்.

அடிஸ் அபாபாவில் இதாலியர் திண்டாட்டம்

கடல் மட்டத்திற்கு 9000 அடிக்கு மேலிருப்பதால் அங்கு ஹிருதயமும், சுவாசகோசமும் மிகவும் அழுத்தமாகவுள்ளவர்கள் மட்டுமே வசிக்க முடியுமென்று இப்போது தெரிவதால் இத்தாலியர்கள் திணறுகிறுர்கள்.

எது நிஜம்?

ஸ்பெயினில் இதாலிய தொண்டர்களின் தொகை 40,000 தானென்றும், சர்க்கார் கட்சியிலுள்ள வெளிநாட்டுத் தொண்டர்களின் தொகை

இதை விட அதிகமென்றும் இதாலிய சர்க்கார் கூறுகின்றனர். ஆனால் ஸ்பெயின் சர்க்கார் இதாலியர் தொகை 1,10,000 என்றும், தங்கள் கட்சியிலுள்ள வெளிநாட்டுத் தொண்டர்கள் 15,000க்கு அதிகமில்லை என்கின்றனர்.

தன் கையே தனக்குதவி

"இத்தாலியர்கள் வயிற்றை வரிந்து கட்டிக்கொண்டு வெளிநாட்டுப் பொருள்களில்லாமலே வாழ்க்கையை நடத்தவேண்டும்" என்று முஸோலினி அறிவித்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியே ஒவ்வொரு தேசமும் நடந்துகொண்டால்?...

பிரபல அமெரிக்கரின் வருகை

"**நியூ யார்க் டைம்ஸ்**" பத்திரிகையைச் சேர்ந்த ரேவரண்ட் **வில்மட்**, மகாத்மா காந்தி, பண்டித நேரு, ஸ்ரீ. சுபாஷ் போஸ் முதலிய பல தலைவர்களைக் கண்டு இந்திய பிரச்னையை ஆராய்ந்து அமெரிக்கருக்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்ற ஆசையுடன் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். இனியாவது, அமெரிகாவில நமது தேசத்தைப்பற்றி நடக்கும் துர்பிரசாரங்களுக்கு இடமிராதென்று நம்புகிறோம்.

உள் நாட்டுச் செய்திகள்

—:(o):—

மைசூரில் கரும்புப் பயிருக்கு விசேஷ வசதி

கரும்புப் பயிருக்கு வேண்டிய மிகவும் அவசியமான உரங்களுக்கு அம்மோனியம் ஸல்பேட்டையும், கந்தகத் திராவகத்தையும் உற்பத்தி செய்ய ஒரு புதிய கம்பெனி மைசூரில் ஆரம்பமாயிருக்கிறது. இதற்கு வேண்டிய ஜலத்தை கிருஷ்ணராஜ சாகரத்திலிருந்து இனமாகவும், மின்சார சக்தியை மிகவும் குறைந்த விகிதத்துக்கும் மைசூர் சர்க்கார் சப்ளை செய்வதுடன் அதன் சரக்குகளைத் தாமும் வாங்கிக்கொள்வார்களெனத் தெரிகிறது. இத்தொழிற்சாலை திட்டத்திற்குக் காரணகர்த்தர் சந்தன எண்ணெய் தொழிற்சாலையில் கீர்த்தி வாய்ந்த ஸ்ரீ. எஸ். ஜி. சாஸ்திரியாராதலால் இந்த முயற்சி பூர்ண வெற்றியடையுமாக.

வரவில் பாதி சம்பளமா?

நமது மாகாணத்தில் கிராம சேவையில் சுமார் ஒரு லக்ஷம் பேர் இருக்கிறார்கள். இவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் 116 லக்ஷம் தான்,

ஆனால் பாக்கியுள்ள சர்க்கார் உயர்தர சேவகர்களுக்கு சுமார் 700 லக்ஷம் சம்பளம். நமது மாகாண வருமானத்தில் பாதி அதிகாரிகளின் சம்பள மாகவே போய்விடுகின்றது.

ஸ்ரீ. ஜவஹருக்கு சுதேசி மோட்டார்

கிரேஸின் எண்ணெயில் ஓடும்

பண்டித ஜவஹர், பஞ்சாபில் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது, அவருக்கு ஜலந்தூரில் செய்யப்பட்ட ஒரு இந்திய மோட்டார் கார் சன்மானம் அளிக்கப்படும். மேற்படி கார் மண்ணெண்ணெயில் ஓடும். பெட்ரோல் தேவையில்லை.

பம்பாயில் அவசரச்சட்ட தடைகள் நீக்கம்

பம்பாய் சர்க்கார் அறிக்கை வருமாறு கூறுகிறது :—

"பம்பாயில் முன்பிருந்த சர்க்கார்கள் அவசரச் சட்டங்களின் கீழ் ஸ்தாபனங்களுக்கும், நபர்களுக்கும் விதித்திருக்கும் தடையை, சர்க்கார் இப்பொழுது போக்கிவிட்டது.

மாணவர்களுக்கு மந்திரிகளின் உபதேசம்

"மாணவர்களின் வாழ்க்கை, பூமியிலுள்ள விதையை யொத்திருக் கிறது. தான் வெளிவரக்கூடிய நிலைமை யேற்படும் வரை, எப்படி விதை பூமியிலுள்ளிருக்கிறதோ, அதைப்போலவே மாணவர்களும் கொஞ்ச காலம் வரை அடக்கத்துடனிருக்கவேண்டும். ஆனால் மாணவர்களை அடக்கி வைப்பதை சர்க்கார் ஆதரிக்குமென யாரும் அர்த்தம் செய்யலாகாது. அரசியல் சுதந்திரமளிக்க பயந்ததினால் தான், பழைய சர்க்கார்கள் மாண வர்களை அடக்கி வந்தன. இப்பொழுது அந்தக் கட்டுப்பாடுகளெல்லாம் ஒழிந்துவிடும். நீங்கள் நன்றாக ஆலோசனை செய்து, தேசபக்தர்களாக வேண்டுமென்பதே எனது விருப்பம்."

—ஸ்ரீ ராஜாஜி.

"இக்கல்வி ஸ்தாபனத்திற்கு நீங்கள் யோக்யதையுள்ளவர்களானால், உங்களுடைய அறிவு பெருமைப்படக்கூடியதாக விருக்குமானால் சிறியவர்க ளென்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்? உங்களுடைய பட்டங்களைக் கொண்டு நீங்கள் தேசத்துக்குச் சேவை செய்யப்போகிறீர்களா? அல்லது அறிவைக்கொண்டா? மனித சுபாவத்தை அறிந்துகொள்வது அனுதாப முள்ள ஹிருதயம், சேவை செய்யும் திறன் முதலியவற்றையே நோயாளி உங்களிடமிருந்து விரும்புகிறார். உங்களுடைய யோக்யதாம்சங்கள் அல்ல, பட்டங்களல்ல. கௌரவ சேவையின் ஒரு மகத்வத்தை நீங்கள் உணர வேண்டும்."

—ஸ்ரீ. டாக்டர் ராஜன்.

சேலத்தில் மது விலக்கு

மர சொந்தக்காரர்கள் கவனிக்கவேண்டியவை

சர்க்கார் அறிக்கை

கீழ்காணும் அறிக்கையை சென்னை சர்க்காரின் விளம்பர இலாகா வெளியிட்டிருக்கிறது:

ஒருவர் வசமுள்ள மரங்களை கள்ளிறக்க அநுமதிப்பது குற்றமாகும். திருட்டு மது பான வியாபாரத்தை நடத்த இடங்கொடுப்பதும் குற்றமாகும். கள் உற்பத்தி செய்யவோ அல்லது வியாபாரத்தை நடத்தவோ மரத்தை யாவது, கட்டிடத்தையாவது கொடுத்து உதவி செய்கிறவர்கள் சட்டப்படி குற்றவாளியாவார்கள். சட்டத்தின் முக்கியமான அம்சம் என்னவென்றால் கள் குடித்தவர்களுக்கும், கள் அல்லது இதர போதை தரக்கூடிய வஸ்துக் களை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கும் தண்டனை விதிக்கப்படும்.

திருட்டுக் கள் வியாபாரத்தை நடத்த கட்டிடத்தை அநுமதித்தால் அநுமதித்தவர்களுக்கு ஆறு மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் ரூ. 1,000, அல்லது இரண்டு தண்டனைகளும் சேர்த்து விதிக்கப்படும்.

கோவில் மரங்களைக் கள் இறக்க விடக்கூடாது

ஹிந்துமத பரிபாலன சபைக் காரியதரிசி பின்வருமாறு தெரிவிக் கிறார்: தற்சமயம் சர்க்காரின் கொள்கையை உத்தேசித்து 1926-ம் வருஷ ஹிந்து மத பரிபாலன சட்டத்தின் கீழ் வரும் எல்லா ஆலய டிரஸ்டிகளும் இவர்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் ஸ்தாபனங்களிலுள்ள பனை, தென்னை மரங்களில் கள் இறக்க அனுமதிப்பதை நிறுத்திவிடவேண்டுமென இச்சபையினர் அபிப்பிராயப்படுகின்றனர்.

மது விலக்கு பீதி

சீக்கிரத்தில் மதுவிலக்கு அனுஷ்டானத்திற்கு வந்துவிடுமென்ற பீதியினால் பம்பாயை அடுத்துள்ள ஜில்லாவில் கள்ளுக்கடைகள் ஏலத்தில் 16-ல் 5 தான் எடுக்கப்பட்டன.

சபாஷ் ஒரிஸா!

ஒரிஸா மாகாணத்தில் இதுவரையில் 60,000 காங்கிரஸ் அங்கத்தினர் சேர்ந்திருப்பதாகவும், இது விகிதாசாரத்திற்கு இரண்டரை மடங்கு அதிக மென்றும் தெரிகின்றது.

தமிழ் நாட்டில் 2-1/2 லக்ஷம் காங்கிரஸ் மெம்பர்கள்

ஜில்லா	சேர்க்கப்பட்ட அங்கத்தினர்கள்	ஜில்லா	சேர்க்கப்பட்ட அங்கத்தினர்கள்
கோயம்பத்தூர்	30,393	மதுரை	15,539
திண்டுக்கல்	28,808	திருச்சினுப்பள்ளி	14,980
ராமநாதபுரம்	25,780	தென் ஆற்காடு	13,324
காரைக்குடி	23,735	சென்னை நகரம்	11,583
திருநெல்வேலி	22,409	சேலம்	11,018
தென் தஞ்சை	21,359	வட ஆற்காடு	10,701
வட தஞ்சை	19,462	செங்கற்பட்டு	9,162
		ஆகக் கூடுதல்	2,58,253

வங்காளத்தில் 1-1/2 லக்ஷத்திற்கு மேல்

இவ்வருஷம் வங்காளத்திலே ஒன்றரை லக்ஷத்திற்கு மேற்பட்டவர்கள் காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கின்றனர் என்றும், சென்ற வருஷம் 85,000 பேர்கள் தான் சேர்ந்தனர் என்றும், கல்கத்தாவில் மட்டும் இவ்வருஷம் 60,000 பேர்கள் காங்கிரஸ் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கின்றனர் என்றும் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தில் விசாரித்ததில் தெரியவந்தது.

ம. மா. வில் காங்கிரஸ் மெம்பர்கள் தொகை

மத்ய மாகாணத்தில் 24900 பேர்கள் காங்கிரஸ் மெம்பர்களாகியிருக்கின்றனர் என்று தெரிகிறது. இம்மாகாணம் சேர்க்கவேண்டிய பங்கு 6,500 தான்.

நாகபுரி ஜில்லாவில் 11050 பேர்களும், வார்தா ஜில்லாவில் 7500 பேர்களும் காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கின்றனர்.

அகில இந்திய காங்கிரஸ் மெம்பர்கள் 20 லக்ஷத்திற்கு மேலிருக்கும்

அ. இ. கா. கமிட்டியின் வெளி காட்டிலாகா அறிக்கைப்படி, சென்ற வருஷத்தைக் காட்டிலும் இவ்வருஷம் மூன்று மடங்கு அதிகமாக காங்கிரஸ் மெம்பர்கள் சேர்ந்திருக்கிறார்கள். மொத்த மெம்பர்கள் 20 லக்ஷத்திற்கு மேலிருப்பார்களெனத் தெரிகிறது.

சென்னை சர்க்கார் உத்தியோகஸ்தர் செலவு

1935-36-ல் ரூ. 812·46 லட்சம்

1935-36- வருஷத்தில் சென்னை மாகாணத்தில் உத்தியோகஸ்தர் எண்ணிக்கை செலவு பற்றி சென்னை விளம்பர இலாகா மந்திரி பின் வரும் புள்ளி விவரங்களை பிரசுரித்திருக்கிறார் :—

	எண்ணிக்கை	செலவு (லட்சங்கள்)
ஐ. ஸி. எஸ்.	162	ரூ. 28·69
அகில-இந்திய சர்விஸ் (ஐ. ஸி. எஸ். தவிர)	261	ரூ. 38·68
மாகாண சர்விஸ்	1,414	ரூ. 101·74
இதர சர்விஸ்கள், மந்திரிகள் இலாகா, கீழ்த்தர சேர்விஸ்கள், கிராம ஊழியர் உட்பட	204,162	ரூ. 550·82
மொத்த பென்ஷன் செலவு		ரூ. 92·53
மொத்தம்	2,05,999	812·46

முஸ்லீம்கள் காங்கிரசில் சேருக !

கவி தாகூர் செய்தி

சமீபத்தில் சிட்டகாங்கில் அமைக்கப்பட்ட காங்கிரஸ் கமிட்டிக்கு கவி ரவீந்திரநாத் தாகூர் முஸ்லிம்கள் காங்கிரசில் சேரவேண்டுமென்று அனுப்பிய செய்தி வருமாறு :—

தேசத்தின் விடுதலைப் போரிலே, ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சேர்ந்து உழைக்கவேண்டுமென்பதே, தேசபக்தி உள்ள ஒவ்வொருவருடைய விருப்பமாகும்.

இவ்விஷயமாக, விடாமுயற்சியுடன் சுதந்தரம் அடைந்தே தீருவதென்ற சங்கல்பத்துடன் பாடுபட்டு வரும் காங்கிரஸ் வழியை யாவரும் பின்பற்றவேண்டும்.

கீழ்கோடியில் உள்ள முஸ்லீம்கள் இந்தியாவின் குறைகளும், கட்டுப்படுத்தி யிருக்கும் தளைகளும் போய் தங்கள் சுய நிர்ணயாதிகாரத்தை நிலை நிறுத்திக்கொள்ளச் செய்துவரும் பெருமுயற்சி வெற்றி பெறுமென்ற அபிலாஷை கொள்ள வேண்டுமென்றே தேசம் எதிர்பார்க்கிறது.

இதற்கு இடைஞ்சலாகவுள்ள யாவும் இந்த தேசத்திற்கு அவமானத்தைக் கொண்டு வருபவைகளாகும்."

இந்தச் செய்தி அங்குள்ளோர் மனதில் ஒரு நல்ல அபிப்ராயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

பீஹாரில் கட்டாய ஆரம்பக் கல்வி

1938-ம் வருஷ ஆரம்பத்தில் பீஹார் மாகாணத்தில் முனிசிபல் எல்லைக்குள் கட்டாய ஆரம்பக்கல்வி அமுலுக்குக்கொண்டு வரப்படுமென கல்வி மந்திரி டாக்டர் மகமது, பெட்டையாவில் ஒரு உபசாரப் பத்திரத்துக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

தாய்ப்பாஷையின் மூலந்தான் பாடங்கள் போதிக்கப்படுமென்றும், இதனால் மெட்ரிகுலேஷன் படிப்பு காலத்தில் இரண்டு வருஷங்கள் மிச்சமாகுமென்றார். இந்த இரண்டு வருஷங்களிலும் மாணவர்களுக்கு கிராமங்களில் பயிற்சி பாடங்கள் போதிக்கப்படும்.

கட்டாய ஆரம்பக் கல்விக்கு வேண்டிய பணத்தை சர்க்காரே செலவழிக்கும். இதனால் நகர சபைகளுக்கு ஏற்படும் மிச்ச பணத்தை, நகர சுகாதாரத்திற்காக முனிசிபாலிடிகள் செலவழிக்க வேணுமாய் சர்க்கார் கேட்டுக் கொள்ளும்.

இதைப்பற்றிய விரிவான திட்டம் நவம்பரில் வெளியிடப்படுமென்றும், அப்பொழுது இந்த திட்டத்தை கிராமங்களிலும் அமுலுக்குக் கொண்டு வரலாமா வென்ற பிரச்னை விவாதிக்கப் படுமென்றும் கல்வி மந்திரி தெரிவித்தார்.

அனந்தபூரில் கதர் பிரசாரத்திற்கு

ரூ. 5000 நன்கொடை : ரூ. 45,000 கடன்

ஒரு கனவானின் தாராளம்

மகாத்மாவின் நன்றி

அனந்தபூர் ஜில்லாவைச் சேர்ந்த தாட்பத்திரியிலிருந்து ஸ்ரீ. மூலா லக்ஷ்மி நாராயணஸ்வாமி என்பவர் கதர் அபிவிருத்திக்காக ரூபாய் ஐயாயிரம் நன்கொடையளித்திருப்பதாக 'ஹரிஜன்' பத்திரிகையில் மகாத்மா காந்தி அறிவிக்கிறார்.

அனந்தபூர் ஜில்லாவில் கதர் பிரசாரம் செய்வதற்கு 3 சத விகிதம் வட்டியில் ரூபாய் நாற்பத்தைந்தாயிரம் கடன் கொடுக்கத் தயாராயிருப்பதாகவும் அவர் வாக்களித்திருக்கிறாராம்.

"இந்தப் பணத்துக்கு இதைவிட வேறு நல்ல செலவு என்ன இருக்கப்போகிறது?" என்று காந்திஜி அவரைப் பாராட்டியிருக்கிறார்.

ஹரிபுரம் காங்கிரஸ் நகர் அங்குரார்ப்பண விழா

அக்டோபர் 14-ம் தேதி காலை சர்தார் வல்லபாய் பட்டேல் தப்தி நதிக்கரையில் ஹரிபுரம் காங்கிரஸ் நகரின் அங்குரார்ப்பண விழாவை நடத்தி வைத்தார். சுற்று வட்ட கிராமங்களிலிருந்து சுமார் இருபதினாயிரம் குடியானவர்கள் விஜயம் செய்திருந்தனர். குடியானவர்கள் தங்களாலானதைக் காங்கிரஸுக்குக் கொடுத்து காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைக்க வேண்டுமென்று சர்தார் கேட்டுக் கொண்டார்.

காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்துடன் சேர்ந்தாற்போல் பசுக்கள் காட்சியும் நடைபெறுமென்றும், அதற்கு குடியானவர்கள் பசுக்களைக் கொண்டு வர வேண்டுமென்றும் சர்தார் கேட்டுக் கொண்டு, காங்கிரஸ் கொடியின் ஒவ்வொரு நூலிழையும் சத்யம், அஹிம்சை, ஒற்றுமை என்பவற்றால் செய்யப்பட்டிருக்கின்றதென்று கூறினார்.

மகாத்மா காந்தியும், பண்டித ஜவஹரும் ஸ்ரீ. படேலுக்கு நல் வாழ்த்துச் செய்திகளை அனுப்பினர்.

மகாத்மா தம்முடைய செய்தியில் கூறியதாவது :—

"ஹரிபுரத்தின் அஸ்திவாரக் கல், சத்தியம், அஹிம்சை, பவ்யம், ஆடம்பரமற்ற வாழ்க்கை முதலியவற்றிற்கு என்று மழியாத நிச்சயமான அஸ்திவாரமாக இருக்குமென்றே நான் நம்புகிறேன். பாபு."

பண்டித ஜவஹர் செய்தி யனுப்பியதாவது:—

"இந்த ஆடம்பர மற்ற விழாவானது நமக்கு மிகவும் அர்த்த புஷ்டியுள்ளது. அதிலிருந்து கிராமம், நகரம், அடுத்த வருஷ காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தின் வீடு முதலியவற்றை ஒன்று சேர்க்கக்கூடிய ஒரு நேர்த்தியான நகரம் வளரப்போகிறது. அத்தகைய நகரத்தைக் கட்டுவதானது தேசத்தை உத்தாரணம் செய்வதற்கு (கட்டுவதற்கு) நாம் கைக் கொண்டுள்ள ஒரு பெரிய செயலின் அறிகுறியாகும். சுயராஜ்யப் பாதையில் மற்றொரு படி தாண்டி விட்டோம் என்ற உரிமையை ஹரிபுரம் அடுத்த வருஷம் அனுபவிக்கப்போகிறது."

பிரஜா உரிமையைப்பற்றி மூன்று தலைவர்கள்

சுதந்திரமென்பது அன்றாடம் தானே பாதுகாத்துக் கொள்ள வேண்டிய ஒரு தனி மனிதனின் சுதந்திரம். ஜனநாயக ஆட்சியிலும் கூட பிரஜைகள் அதன் கொடுங்கோன்மையில் அசிரத்தையாதவோ

அல்லது பேடித்தனமாகப் பயந்தோ நடப்பார்களானல், அத்தகைய ஜனநாயக சர்க்காரும் கொடுமையாகத்தானிருக்கும்.'' —கவி தாகூர்.

"பிரஜா உரிமைகள் என்பவை குற்றம் செய்ய (கிரிமினல்) சுதந்திரம் கொடுத்துவிட்டதாக அர்த்தமில்லே."

7 மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி செய்கிறது. இந்த மாகாணங்களிலாவது எந்த மனிதர்களும் என்ன வேண்டுமானலும் சொல்லலாமென்று சிலர் ஊகித்துக் கொண்டனர் என்று தோன்றுகிறது.

ஆனல் காங்கிரஸ் மனதை நான் அறிந்த வரையில் மேற்சொன்ன மாதிரியான அத்து மீறின நடத்தையை காங்கிரஸ் ஒருபோதும் விட்டு வைக்காது.

பிரஜா உரிமைகள் என்ருல் சாதாரணச் சட்டத்தின் எல்லேக்குள் ஒருவர் விரும்பியபடி எதுவும் செய்யலாம், என்ன வேண்டுமானலும் பேசலாமென்றுதான் அர்த்தம்.

'சாதாரண' என்ற வார்த்தையை வேண்டுமென்றே இங்கு உபயோகப்படுத்தி யிருக்கிறேன்.

இந்தியன் பீனல் கோட், கிரிமினல் கோட், இதைத் தவிர விசேஷ சட்டங்கள் இவைகளிலெல்லாம் ஆளும் அன்னிய நாட்டார், அவர்களேப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏற்படுத்திய சில பிரிவுகள் இருக்கின்றன.

இந்தப் பிரிவுகளே வெகு சுலபமாக கண்டு பிடித்துவிடலாம். இவைகளே அநுஷ்டிக்காமல் ரத்து செய்துவிடவேண்டும்.

—"மகாத்மா காந்தி"

காங்கிரஸ் ஆட்சி நடக்கும் மாகாணங்களுக்கும், மற்றவற்றிற்குமுள்ள வித்தியாசம்

"மாகாணங்களில் காங்கிரஸ்காரர்கள் பதவி யேற்றுக்கொண்டதானது துரிதத்தில் பல மாறுதல்களே ஏற்படுத்தின. பிரஜா உரிமைகள் சம்பந்தமாக ஏற்பட்ட மாறுதல்கள் குறிப்பிடத்தக்கவை.

ஏராளமான ஸ்தாபனங்கள் மீது சர்க்கார் விதித்திருந்த தடைகள் நீக்கப்பட்டன. ஏராளமான அரசியல் கைதிகள் விடுதலே செயயப்பட்டனர். பத்திரிகைகளிடமிருந்து வாங்கிய ஜாமீன் தொகைகள் திருப்பி அளிக்கப்பட்டன. ஸி. ஐ. டி. கள் பொதுஜன ஊழியர்களே இடைவிடாது பின்பற்றுவதும் நின்றது. பொதுக்கூட்டங்கள் குறுக்கிடப்படுவதில்லே. என்னமோ ஸ்வப்பனத்தினின்று விழித்தெழுந்தவர்கள் போல ஜனங்களிடையே உணர்ச்சியிருக்கிறது."

காங்கிரஸ் ஆட்சி நடக்காத மாகாணங்கள் பற்றி ராஷ்டிரபதி கூறியதாவது:—

"முன்பு இருந்தது போலவே இப்பொழுது வங்காளம் பிரஜா உரிமைகளே அடக்குவதிலும், ஒடுக்குவதிலும் தலேமை வகிக்கிறது.

சிட்டகாங் ஜில்லாவில் மட்டும் இருபத்தி மூன்ருயிரம் பேர்கள் தடைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர் என்று கூறும்போது அப்படியே திகைப்பினல் ஸ்தம்பித்து விடுகிருேம். இன்னும் விசாரணேயின்றி

வங்காளத்தில் ஏராளமான பந்தோபஸ்துக் கைதிகள் இருக்கின்றனர். அநேக வருஷங்களாக இவர்கள் முகாம் சிறையில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பாஞ்சாலமும் மோசம் தான். பிரிட்டிஷ் ராஜ்யத்தின் பூர்ண பலமும் வங்காளத்திலும், பஞ்சாபிலுமுள்ள அந்த துர்பாக்ய ஜனங்களை அமுக்குகிறது"

எல்லைப்புறத்தினரைப் பற்றி ராஷ்டிரபதி அறிக்கை

இந்தியாவின் வடக்குக் கோடியில் உள்ள இங்குள்ள வீர மக்களைக் கண்ணுற்றேன். இவர்களுடைய அழியா உற்சாகமும், உறுதியான கட்டுப்பாடும் ஒளிவு மறைவு இல்லாததும், எளியதுமான இவர்கள் வாழ்க்கை முறையும் என் மனதைப் பறித்தன.

இந்தியாவின் சுதந்திர இயக்கத்திற்கு இவர்களைவிட திடமான வீரர்கள் வேறு வேண்டுமா? இந்தியாவைக் காப்பாற்ற இவர்களை விட தைர்யமான மக்கள் வேறு வேண்டுமா? இவர்களைப்போன்ற தோழர்கள் நமக்கிருப்பது இன்பகரமான ஒரு சலுகை; அபூர்வமானதொரு ஆனந்தம்!

இந்தியாவின் ஆசார வாசலைப் பாதுகாப்பவர்கள் இவர்கள் தான். நமது தேசீய சுதந்திர இயக்கத்தில் முன்னணியில் இருப்பவர்களும் இவர்கள் தான்.

மற்ற மாகாணங்களில் உள்ள ஆடம்பரமற்றவர்களிடமிருந்து இவர்கள் பல கற்றுக்கொள்ளலாம். மற்ற மாகாணத்தினரும் தைரியம், உறுதி, நேர்த்தியான கட்டுப்பாடு, குறுகிய ஜாதிப்பித்து இல்லாமை ஆகியவைகளை வடக்கேயுள்ள நம் அருமையான தோழர்களான இவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.

இந்த மாதிரியாக இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் நாம் யாவரும் ஒன்று சேர்ந்து முன்னேறிப் போவோமாக!

உள்நாட்டு அமைதிக்கு ராணுவம் அவசியமில்லை

மந்திரிகள் ராணுவத்தை அழைக்கவேண்டிய நெருக்கடி ஏற்படும் வரையில் ஒரு விஷயத்தையும் விட்டு வைக்கக்கூடாது.

ராணுவம் ஜனங்களுக்குச் சொந்தமானதல்ல. அஹிம்சா தர்மக் கொள்கைக்கும் இது பொருத்தமானதல்ல.

ஆதலால் மந்திரிகள் ராணுவத்தை அழைக்கும்படியான ஸ்திதியில் இருந்தால் அவர்கள் அரசியலில் 'பஞ்சை' என்பது தான் என் அபிப்பிராயம்.

ஆதலால் உள்நாட்டு அமைதியைக் காக்க ராணுவம் அழைப்பதை அடியோடு கைவிட்டுவிட வேண்டும். —" மகாத்மா காந்தி "

சென்னை கார்பரேஷனில் ஊழல்கள்

கல்வி அதிகாரி நியமன விஷயமாகக் கூடிய கூட்டத்தில் கடுமையான வாதங்களும், ஒழுங்கு ப்ரச்னைகளும் காணப்பட்டன. மொத்தம் 44 மெம்பர்களே ஓட்டு கொடுத்தனர். முக்கியமான காங்கிரஸ் மெம்பர்களும், மற்றவர்களும் கூட்டத்திற்கு வரவே இல்லை. இம்மாதிரியான அசிரத்தைக்கும், கக்ஷிப் பிரதி கக்ஷிகளுக்கும் காரணம் என்ன?...சென்ற வருஷ தேர்தலில், அதற்கு முன்வரையில் காங்கிரஸ் விரோதிகளாயிருந்தவர்களையும், பசுத்தோல் போர்த்த புலிகளையும் சேர்த்துக் கொண்டதன் பலன், சில மாதங்களாக நடக்கும் நடவடிக்கைகளிலிருந்து நன்கு புலனாகின்றது.

காங்கிரஸ் என்ற மதிப்புக்காகவே ஓட்டர்கள், யாரை நிறுத்தின போதிலும் ஆதரவளித்தார்கள். என்றும் அப்படி ஏமாறமாட்டார்கள். இனியாவது காங்கிரஸ் தலைவர்கள் கண்மூடித்தனமாக கண்டவர்களுக்கும் பதவியைக் கொடுத்து, காங்கிரஸின் செல்வாக்கு குறையும்படி நடக்க மாட்டார்களென்று நம்பப்படுகிறது.

வார்தா கல்வி மகாநாட்டுத் தீர்மானங்கள்

7 வருஷம் இலவச கட்டாய ஆரம்பக் கல்வி

1. விஸ்தீரணமான கட்டுக்கோப்பில், ஏழு வருஷங்களுக்கு இலவச, கட்டாய ஆரம்பக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

2. கல்வி தாய் பாஷையின் மூலமாகவே போதிக்கப் படவேண்டும்.

3. இந்த 7 வருஷ காலத்திலும் போதிக்கப்படும் கல்வி லாபகரமான உடலுழைப்பு சம்பந்தமான தொழிற் கல்வியோடு இணைந்திருக்க வேண்டும்; குழந்தைகளுக்குப் பரிச்சயமுள்ள ஓர் முக்கிய கைத்தொழில் சம்பந்தப்பட்டதாக, அதன் மூலமாக இதர திறமைகளும் வளர்க்கப்பட வேண்டுமென்ற மகாத்மா காந்தியின் உத்தேசங்களை இம் மகாநாடு ஆதரிக்கிறது.

4. இந்த முறையில் போதிக்கப்படும் கல்வி, ஆசிரியர்களின் சம்பாவனையையும் பொறுக்கக்கூடிய அளவில் படிப்படியாக அபிவிருத்தியடையும் என்று இம்மகாநாடு எதிர்பார்க்கிறது.

பாராட்டுக் கடிதங்கள் ::

நேயர்கள் தபால்

:: எமது வந்தனம்

நம் "மோஹினி" ஆசிரியை சென்ற செப்டம்பர் 21உ முதல் ஒரு வருடத்திற்கு சென்னை சர்க்காரால் "ஸினிமா தணிக்கை போர்ட்டில்" மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதைப் பற்றி நம் சந்தா நேயர்களிடமிருந்து பல பாராட்டுக் கடிதங்கள் நம் காரியாலயத்துக்கு வந்துள்ளன. இலக்கிய உலகில் சிறந்து விளங்கும் சிலர் இவ்வருட போர்டிலிருப்பதால் ஆபாஸமற்ற, அரிய படக்கள் வெளிவர சந்தர்ப்பமேற்பட்டிருப்பதாக அவைகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நம் ஆசிரியர் மேற்படி கடிதங்களுக்குத் தனித்தனியாக பதிலெழுதுவது சாத்தியமில்லையாததால், இதன் மூலம் தன்னால் கூடிய வரை சினிமாக் கலைக்கும், அதன் மூலமாக சமூகத்தும், தேசத்திற்கும் உழைக்கத் தயாராயிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறார். மேற்படி கடிதங்களை எழுதியவர்களுக்கும் "ஸில்வர் ஸ்கிரீன்" பத்திரிகையில் "சபாஷ்! ஸென்ஸர் போர்ட்!" என்ற தலையங்கத்துடன் வெளிவந்த கட்டுரையின் விஷயமாக நமக்குப் பல பாராட்டுக் கடிதங்கள் எழுதியவர்கட்கும், நம் ஆசிரியை வந்தனத்தைத் தெரிவிக்கிறார்.

* * *

நம் "மோஹினி" அச்சாலயத்தை கனம் பிரதம மந்திரி திறந்து வைத்ததைக் குறித்து பல ஆசிக் கடிதங்கள் எழுதியவர்களுக்கும், இதன் மூலமாக எமது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * *

"ராஜமோகன்" "அநாதைப்பெண்" முதலிய நாவல்கள் படமாக வெளிவரப்போவதைக் குறித்து எழுதுகையில் "ஏன் இன்னும் சாந்த குமாரி படம் பிடிக்க ஒப்பந்தம் செய்யப்படவில்லை" யென்று கேட்கின்றார்கள். நாம் நம்முடைய புத்தகங்களை படம் பிடிக்கக் கொடுக்கும் விஷயத்தைப் பற்றி ஒரு தனி கட்டுரை அடுத்த இதழில் பிரசுரமாகுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

"மோகினி" அன்பர்களுக்கு !

—(0)—

அறிவிற் சிறந்த அன்பர்களே !

எம்பெருமானின் கிருபா கடாக்ஷத்தினாலும், பெரியார்களின் ஆசீர்வாதத்தினாலும் "மோகினி"யின் அன்பர்களாகிய உங்களுடைய பேராதரவினாலும் நம் "மோகினி"ச் செல்வியின் 14-வதாண்டு நாளது டிஸம்பர் மாதத்துடன் முடிவடைந்து, 1938-ளூ ஜனவரி மாதத்தில் 15-வதாண்டு மங்களகரமாக ஆரம்பமாகப் போகும் நற்செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகா அறிவாளிகளாகிய உங்களுக்கு நான் எடுத்துச் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. உங்களுக்குள்ள பல ஜோலிகளில் இச்சிறு விஷயம் எங்கே மறந்து விடுமோவென்று ஞாபக மூட்டும் முறையில் இதைத் தெரிவிக்கிறேன். தயவு செய்து தாங்கள் மனமுவந்து அளிக்கும் பேராதரவை—15-வதாண்டின் சந்தாத் தொகையை—அனுப்பி "மோகினி"யின் வளர்ச்சிக்கு உதவியளிக்க வேண்டுமாய்க் கோருகிறேன்.

நிற்க, "வருடா வருடம் ஓர் தனிப் புத்தகம் வெளியாவது இவ்வருடம் ஏன் வரவில்லை?" என்று பல அன்பர்கள் கடிதமெழுதி இருக்கிறார்கள். இத்தனை ஆவலுடன் எழுதி என்னை ஊக்கும் அன்பர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்துடன் அதன் காரணத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மோகினிக்கென சொந்த அச்சாலயம் கனம் பிரதம மந்திரியவர்கள் திறந்து வைத்த சந்தோஷச் செய்தியை வேறு பக்கத்தில் படித்திருப்பீர்கள். நமது சொந்த அச்சாலயம் வந்த பிறகே வருஷம் முடிவதற்குள் தனிப் புத்தகம் வெளியிட வேண்டுமென்ற ஆசையுடன் பேசாதிருந்தோம். புதிய புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறேன். பார்த்தஸாரதியின் கிருபையால் முதல் இதழுக்குள் வெளியாகி விடலாமென்று நம்புகிறேன். அதன் விவரங்களை அடுத்த இதழில் தெரிவிக்கிறேன். மேலும், நமது நாவல்களில் பலவற்றின் முந்திய பதிப்புகள் செலவழிந்து விட்டதானது நமது நேயர்கள் அறிந்த விஷயம். இப்பொழுது நமக்கென சொந்த அச்சாபீஸிருப்பதால் கூடிய சீக்கிரத்தில் ஒவ்வொன்றாக வெளியிட்டுத் தெரிவிக்கிறேன். அதுவரை அன்பர்கள் மன்னிக்கவும்.

நன்றியுள்ள

வை. மு. கோதைநாயகி

15-வது ஆண்டுப் பரிசுகளின் விவரம்

முதல் பரிசு

ரூ. 20

2-வது பரிசு

ரூ. 15

புது வருஷ சந்தாவை டிசம்பர் மாதம் 20-ந் தேதிக்குள் அனுப்பும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு 6 பிரைஸ்சீட்டுகள் எடுத்து அவற்றிற்கு இதிற்கண்ட பரிசுகள் கொடுக்கப்படும்.

3-வது பரிசு

ரூ. 10

3 பரிசுகள்

ரூ. 5 விகிதம்

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு அடுத்த ஆண்டின் சஞ்சிகையை இனாமாக அனுப்புவதுடன் அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

o

தயவு செய்து புது வருஷ சந்தாவை
முன் பணமாக அனுப்புங்கள்.
உங்களது சந்தா நம்பரை
ம ற க் கா ம ல்
எழுதவும்.

"ஜகன்மோகினி" ஆபிஸ்,
26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

நவ நாகரீக காலத்தில் காதலின் பெருமையை விளக்க வருகிறாள்!

தாயில்லை

தந்தையில்லை

உற்றாரில்லை

உறவினரில்லை

அவள்

ஓர்

அனாதைப்பெண்

அபலை — ஆனால்

அவள் உயிர் வாழ்வதேன்?

—"காதல்"—

ஆம்! 6000 மைல்களுக்கப்பால் இருந்தாலென்ன!

பரந்த கடல் வெளி இருவரையும் பிரித்திருந்தாலென்ன?

●

காதலே பக்தி காதலனே தெய்வம் மனமே கோவில்

கைவசமிருக்கும் படம் :—

சந்திரகாந்தா

—விவரங்களுக்கு எழுதவும் :—

ஜுபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்,

திருப்பூர்.

11-வதாண்டில் முதன் முதல் சந்தாதாரராய்ச் சேர்ந்து, இதுவரை தொடர்ச்சியாக ஆதரித்து, புது வருஷ சந்தாவை டிசம்பர் 20 தேதிக்குள் அனுப்புகிறவர்களுக்கு

தனிப் பரிசு

1. 15-வதாண்டுச் சந்தாவை அனுப்புகையில் உங்களது சந்தா நம்பரைக் குறித்து, 1937-க்கு முன் வெளியான நமது நாவல்களில் முழு விலை ரூ. 2 (சந்தா நேயர்களுக்குக் குறைந்த விலை யல்ல.) பெறுமான நாவல்களின் பெயரை எழுதி இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ரூ. 2-க்கு மேற்பட்ட விலையுள்ள புத்தகங்கள் வேண்டுமாயின், அதிகமாகும் பணத்தை அனுப்ப வேண்டும்.

2. மேற்படி இனாம் நாவல்களுக்காக தபாற் செலவு அணா 4 சேர்த்தனுப்பவும்.

குறிப்பு:—டிசம்பர் 20-ந் தேதிக்குப் பிறகு அனுப்புகிறவர்களுக்கு இந்த தனிப் பரிசு கொடுக்கப்படாதாகையால் உடனே முந்துங்கள்.

முதற் பதிப்புக் காபிகள் கொஞ்சமே இருக்கின்றன

உடனே வாங்குங்கள்

அன்பின் சிகரம்

பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினு மினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமையை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன?........

நான்கணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

நமது விளம்பர விகிதம்

ஒரு பக்கத்துக்கு ஒரு முறை	ரூ.	10	0	0
அரை பக்கத்துக்கு ,,	,,	5	8	0
கால் பக்கத்துக்கு ,,	,,	3	0	0
உள்ளட்டைக்கு ஒரு முறை	,,	12	0	0

நீண்ட கால விளம்பரங்களுக்கும், ஒப்பந்த விளம்பரங் களுக்கும் தனிச் சலுகை காட்டப்படும். சினிமா, இன்ஷியூரன்ஸ் போன்ற கம்பெனிகளுக்கு விசேஷ வசதிகளுடன் விளம்பரஞ் செய்வதோடு, முக்கியத்துவமும் பிராதான்யமும் கொடுக்கப்படும்.

மானேஜர்.

தன் தாயும் மைனரும் பேசிக்கொண்ட ஒவ்வொரு வார்த்தையும் அனுசூயாவின் மார்பில் செம்மட்டியால் அடிப்பது போன்று தோன்றியது. "மனித ஜென்மமெடுத்திருக்கும் இவர்கள் உண்மையில் மனிதர்களா? கேவலம் கொடிய அசுரர்களை விடக் கீழ்த்தரமான மனோபாவமல்லவா இவர்களிடம் குடி கொண்டிருக்கிறது! சீச்சீ! இத்தகைய பாழும் என்னைமுள்ள பிறவியை ஏன் ஈசன் பிறப்பித்தான்? உம். போய் தின்டாடி விட்டு வரட்டும்" என்று தனக்குள் கூறிக்கொண்டு உள்ளே சென்றாள்.

அப்போது கூட்டம் ஆரம்பித்து அருமையான அபிநயக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டே அனுசூயா ஒரு பக்கமாகச் சென்று உட்கார்ந்தாள். ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடியே நாட்டியத்திற்குப் பிறகு ஒரு சங்கீதமும், அதற்கடுத்து, ஸ்ரீமதி அனுசூயாவின் "ஜீவகாருண்யம்" என்ற விஷயத்தைப் பற்றிய உபன்யாஸமும் அட்டவணையிலிருந்தது.

பாட்டு முடிந்ததும், அனுசூயா கம்பீரமான தோற்றத்துடன் மேடைக்கு வந்து கரங்குவித்து வந்தனம் செய்த பின்னர், தன் யாழ்போன்ற குரலால் அருமையாகப் பேசவாரம்பித்தாள்.

"அன்பு மிக்க பெரியோர்களே! தாய்மார்களே!

எனது உபாத்தியாயினியின் கட்டளைக்குட்பட்டு நான் பேச வந்திருக்கிறேனேயல்லாது மிகவும் பெரிய விஷயமாகிய ஜீவகாருண்யத்தின் மகிமையை அறிந்து அறிவின் அமுதச் சுடராய்ப் பேசும் சக்தியுடன் பேச வரவில்லை. குற்றங்களுக்கு மன்னிக்கவும்.

ஜீவகாருண்யம் என்பது மனித ஜென்மமாகக் கொண்ட ஒவ்வொருவருடைய தினசரி வாழ்க்கையிலும் நிறைந்து கிடக்கும்படி நம் முன்னோர்கள் அனுஷ்டானத்தில் ஏற்படுத்தியிருப்பதை நம்மில் சிலர் அறிவதில்லை. ஜீவகாருண்யத்திற்காக ஏதோ தனியாகக்

கற்கவேண்டுமென்றும் சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. நாம் விடும் ஒவ்வொரு ஸ்வாஸமும் ஒவ்வொரு விதத்தில் பயன்படவேண்டும்படி நம் வாழ்க்கை அமைந்திருக்கிறது. இதற்கு இரண்டொரு உதாரணம் மட்டும் கூறினால் போதும்; விளங்கிவிடும்.

நமது உயர்வான நித்ய கர்மானுஷ்டானத்தில் காலையில் எழுந்த உடனே வீதியில் ஜலம் தெளித்துக் கோலம் போடுவது என்ற வழக்கம் எதற்காக ஏற்பட்டது? பார்வைக்கு அழகும், மங்களகரமும் பொருந்திய மட்டும் அல்லாமல் பக்ஷிகள், ஈ, எறும்பு முதலிய ஜீவன்களுக்கு ஆகாரம் அளிக்கும் பலன் நம்மை யறியாது நமக்கு உண்டாகிறது. நாம் தினம் காலையில் நம் தேகத்திலுள்ள அழுக்கு நீங்கி சுத்தமாவதற்கு நல்ல குளத்து அல்லது ஆற்று நீரில் நீராடுகிறோம். பத்து பாத்திரங்களையும் அழுக்கு வஸ்திரங்களையும் அக்குளத்தில் சுத்தம் செய்கிறோம்.

அதனுள் புதைந்து கிடக்கும் கருமத்தை நாம் அறிவதில்லை. நாம் அசுசியாக நினைக்கும் அழுக்கு, ஜலத்திலுள்ள மச்சாதிகளுக்கு ஆகாரமாகிறது. பாத்திரங்களிலுள்ள பத்துகளும் ஆகாரமாகிறது. நமக்கும் தேகாரோக்கியமாகிறது. இம்மாதிரி உயர்தரக் கருத்துடன் பெரியோர்கள் நியமித்திருக்கும் அருமையான க்ருத்யங்களை அறவே மறந்துவிட்டோம். நாகரிகப் படுகுழியில் விழுந்துவிட்டதன் பயனால் தர்மமென்பது அதர்மமாகவே ஆய்விட்டது.

நம்மையறியாது செய்யும் தர்மம் இப்படி எத்தனையோ இருக்கிறது. நாம் அறிந்து கண்ணுக்கு நேராகக் கண்டும், காதால் கேட்டும் செய்யும் தர்மங்கள் அனந்தமிருக்கின்றன. பசி என்று துடிக்கும் ஆத்மாவுக்கு ஒரு கவளம் அன்னமிடுதலும், உயிர் போகும்

அவஸ்தையிலுள்ளவர்களுக்கு ஆதரவளித்தலும், இல்லை என்று கையை நீட்டுபவர்களுக்கு இல்லை என்று கூறுமல் சக்தியானுசாரம் ஈதலுமான தர்மத்திற்கு எத்தனையோ பலன் சொல்லியிருக்கிறது.

அவைகளைக் கூட நான் ஜீவகாருண்யம் என்று கூறமாட்டேன். வாயில்லா ஜீவன்களைப் பலி கொடுத்து சாமியை வேண்டி, வேரோடு பிடுங்குகிருர்களே அவ் விஷயத்தில் த்தான் முக்கியமாக ஜீவகாருண்யத்தைக் காட்டவேண்டும். நம்மைப் போன்ற ஜீவன் என்ற உணர்ச்சியே அற்ற ஜடம் போன்றவர்களின் இத்தகைய விபரீதச் செய்கையைத் தடுக்கும் பொருட்டு அனேக சங்கங்களையும், ப்ரசாரகர்களையும் ஸ்தாபித்துப் பாடுபடுவதோடு, பத்திரிகைகளிலும் எழுதவேண்டும்.

ஆறறிவு படைத்த உயர்ந்த மனித வர்க்கம் வாயில்லா ஜீவனைக் கொன்று இம்சை செய்வதைவிட வேடிக்கையானதும், கொடியதுமான ஓர் சம்பவத்தை இன்று நான் கண்டது முதல் இத்தகைய படும் பாவிகள் எந்த ஜீவஹிம்சைக்குத் தான் துணியமாட்டார்கள் என்று என் மனத்தில் போராடுகிறது.

வரும் வழியில் தள்ளாத கிழவியொருத்தியும் பூர்ண கர்ப்பிணியும் நடக்கமாட்டாது நடந்து வரும் போது பணத்திமிரும் அகம்பாவமும் கவசமாகப் போர்த்துக்கொண்டு கண்ணு மண்ணு தெரியாமல் காரை வேண்டுமென்று அந்த கிழவியின் மீது ஏற்றிக் கொண்டே சென்ற காட்சியைக் கண்டதும் என்னுயிர் நடுங்கியது; துடிதுடித்தது. அப்பாதகனின் மனமென்ன கல்லா, கொடிய இரும்பா, பெரும் பாறை தானு? அவனுக்கும் ஒரு காலத்தில் சாவு உண்டு என்பதை அவ்வரக்கன் இப்போதிருக்கும் திமிரில் உணரவில்லை போலும்."—

என்று இவள் வெகு ஆவேசத்துடன் பேசுவதைக் கேட்டு ஜனங்கள் "ஷேம்! ஷேம்!" என்று அந்த துராத்மாவுக்கு வெறுப்பு காட்டி ஆரவாரம் செய்தார்கள். அதே சமயம் ஜமீந்தாரும், குப்பம்மாளும் ஆஸ்பத்திரியிலிருந்து "அந்த கழுதை எங்கே போயிருக்கும்?" என்று கூறிக்கொண்டே உள்ளே வருகையில் அனுசூயாவின் ஆவேசமான பேச்சும், ஜனங்களின் உணர்ச்சியும் அவர்களறிந்ததும் அப்படியே இடிந்து கல்லாய்ப் போய்விட்டார்கள்.

மைனர் ஜமீந்தாருக்கோ, தன் பெயரை இங்குக் கூறி வேண்டுமென்று அவமானப்படுத்துவதற்குத் தான் இவ்விதம் சொல்கிறுள் என்று தோன்றிவிட்டது. மீசை துடிதுடிக்கிறது. கண்கள் சிவக்க உதட்டைக் கடிக்கிறுர். குப்பம்மாளும் கூறத் திறமற்ற அவஸ்தையுடன் ஜமீந்தாரின் முகத்தைப் பார்க்கிறுள். ஜமீந்தாரும் குப்பம்மாளைப் பார்க்கிறுர். திருடனுக்குத் தேள் கொட்டியது போலான வேதனை செய்கிறது. அனுசூயாவைக் கொலை செய்துவிடலாமா என்ற ஆத்திரம் மைனரின் இதயத்தை துளைத்து வாட்டுகிறது.

இந்த அவஸ்தைகளுடன் நிற்கும் இவ்விருவரையும் அனுசூயா மேடை மீதிருந்தபடியே பார்த்துவிட்டாள். பின்னும் ஆத்திரம் பொங்கி எழுந்தது. அதோடு பேசத் தொடங்கி,

"அன்பர்களே! இம்மாதிரி கொழுத்த கிடாவைப் போன்ற மனிதன் இத்தகைய செய்கையைச் செய்துவிட்டுத் திரும்பியும் பாராமல் சென்றுவிட்ட சம்பவத்தை என் கண்ணுறக் கண்டேன். இத்தகைய பாவிகள் இந்த பரிதாபகரமான ஏழைகளை வேண்டுமானுல் ஏய்த்து விடலாம். ஓடி ஒளிந்து தப்பித்துக் கொள்ளலாம். பணத்தினுல் மறைந்துவிடலாம். ஆனுல் அந்தத் திமிர் படைத்த அரக்கனைப் படைத்த ஆண்டவனின் முன்பு அவன் செய்கைக்குத் தப்ப முடியுமா? அவன் அகம்பாவமும் கர்வமும் துணை புரியுமா?

அன்பர்களே! ஜீவகாருண்யத்தைப் பற்றி பேச வேண்டுமென்றால் எத்தனை நேரம் வேண்டுமானாலும் பேசலாம். பக்கம் பக்கமாக வரையலாம். நான் அதிக நேரத்தைக் கொள்ளை கொள்ள விரும்பவில்லை. எந்த மனிதரும் தங்களால் இயன்ற மட்டும் ஜீவகாருண்யத்துடன் பிறருக்குச் செய்வதுடன் பலிகளையும் தடுக்க வேண்டும். வாயினால் பேசிவிட்டுச் செய்கையில் பிரயோஜனமில்லை யெனில் அது வீண் வம்பு பேசுவதே யாகும்.

அந்த மோட்டாரினால் அடிபட்டவர்களை என்னால் கூடியவரையில் ஜாக்ரதையாக ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டு விட்டு, 5 ரூபாயுங் கொடுத்துவிட்டு வந்தேன். எதையும் தான் சொல்வதை சாத்யமான வரையில் செய்து காட்ட வேண்டும். ஜீவஹிம்சைகளைத் தடுத்து உதவி புரிய வேண்டும். இதற்கான வசதிகளை பெரியார்களும், தனவந்தர்களும் செய்வார்கள் என்று நம்பி என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.''

என்று கூறிவிட்டு இறங்கி, தன் ஆசனத்தில் அமர்ந்தாள். ஜனங்களின் கரகோஷம் இரண்டு நிமிட நேரம் அந்த கட்டிடத்தைச் சுற்றிக் கொண்டது. பிறகு முறைப்படி நடக்க வேண்டியவைகள் நடந்ததும் கூட்டம் கலைந்தது. அனுசூயாவும் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு தன் காரில் வந்து ஏறிக் கொள்ள வந்தாள்.

183012

ஏற்கெனவே அதில் தயாராக உட்கார்ந்திருந்த மைனர் ஜமீந்தாரையும், தன் தாயையும் கண்டதும் முகம் சடக்கென்று மாறியது. அக்காரில் ஏறிக்கொள்ள மனமற்றவளாய்த் தயங்கினாள். குப்பம்மாள் அதிகார தொனியுடன் "ஊம்; ஏறு? என் ஆடு திருடிய கள்ளனைப்போல் விழிக்கிறாய்? அதிகப்ரஸங்கம் செய்யவும் தைரியம் பிறந்து விட்டது. நீ என்ன செய்வாய் பாவம்! இருக்கட்டும்'' என்று ஆத்திரத்துடன் கூறினாள்.

அனுசூயா :—"ஊம். உலகத்தில் மனிதர்கள் பாவ புண்ணியத்திற்கும் அஞ்சாமல் கொலை செய்யவும், அதற்குத் தாளம்போடவும் தைரியம் வரும்போது, பேசுவதுதான் குறைந்து விட்டது?" என்று அலக்ஷியமாகக் கூறிக் கொண்டே திரும்பிப் பார்த்தாள். தன் உபாத்தியாயினி காரில் ஏறப் போவதையும் தன்னை யழைப்பதையும் பார்த்து விட்டாள். "அம்மா! நீங்கள் போங்கள். என் உபாத்தியாயினி கூப்பிடுகிறார். நான் போகிறேன்" என்று கூறிக்கொண்டே புள்ளிமான்போல் துள்ளி ஓடி, உபாத்தியாயினியிடம் சென்று காரில் அமர்ந்தாள்.

உபாத்தியாயினியே காரை ஓட்டப் பழகியவளாகையினால் அவளே ஓட்டவாரம்பித்தாள். காரும் கிளம்பிப் பறந்து விட்டது. ஜமீன்தாரின் முகத்தில் சாணியை அறைந்ததுபோல் ஆய்விட்டது. திருகத் திருக விழித்தார். ஒன்றுமே தோன்றாமல் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டே அசடு வழிய காரை ஓட்டவாரம்பித்தார்கள்.

நாட்கள் ஓடி மறைந்து விட்டன. எத்தனை சாகஸங்கள் செய்து வெளிப்படையாகக் கூறியும் ஒன்றும் பயனற்று விட்டதால், உயிரிருந்தும் சவத்திற்கு ஒப்பாக ஆய்விட்ட அனுசூயா தன்னம்பிக்கையையே இழந்தாள். கல்யாண வீடு தேவேந்திரனின் கொலு மண்டபம்போல் ஜ்வலிக்கின்றது. எல்லோரும் விவாகத்திற்கு வந்து விட்டார்கள். வந்திருக்கும் விருந்தாளிகளில் பலர் மிஸஸ் ராமலிங்கத்திற்கு ஜமீந்தாரரின் சம்பந்தம் கிடைத்து விட்டது பற்றி வெகுவாகப் பாராட்டியும், அனுசூயாவின் அதிர்ஷ்டத்தை மெச்சியும் பேசினார்கள்.

அம்மாதிரி பேசும்போதெல்லாம் அனுசூயாவின் மனத்தில் ஈட்டி குத்துவதுபோன்ற வேதனை யுண்டாகித் தவிக்கிறாள். விடியற்காலை 5 மணிக்கே முகூர்த்தமாகையினால் இரவு முதல் விவாகச் சடங்குகள் நடக்க வாரம்பித்தன. மைனர் ஜமீந்தாரின் முறுக்கும் கர்வமும் அவர் அடிக்கடி இருமாப்புடன் நோக்குவதும் வெகு விசித்திரமாயிருந்தது. அனுசூயாவைப்

பார்த்த சிலருக்கு "இதென்ன மணமா அல்லது அப்பெண் பிணமா" என்று ஐயுறும்படியான பரிதாபக்களையுடன் அனுசூயா விளங்கினாள்.

கல்யாணத்திற்கு வந்திருந்த ஒரு சீமாட்டியின் குழந்தையை வைத்துக்கொள்ள கூட வந்திருந்த வேலைக்காரி இந்த மணமகனைப் பார்த்தவுடனே அவளது வயிறு பற்றி எரியவாரம்பித்தது. தனக்குள் தவித்து, தத்தளித்துச் சாகிறாள். பெருமூச்சும் புலம்பலும் அவளை மீறிப் பொங்கிவிட்டன.

சிறிது நேரம் அடக்கிப் பார்த்தும் அவளால் சாத்தியமில்லாது போய்விட்டதால் ஆவேசங் கொண்ட காளியைப்போல் மணப் பந்தலுக்கு ஓடி வந்தாள். அப்போது மணப்பிள்ளை பந்தலில் உட்கார்ந்திருந்தார். அந்த வேலைக்காரி ஆத்திரத்துடன் முன்னே வந்து "அட படுபாவி! உனக்கு கல்யாணம் ஒன்று வேண்டி இருக்கிறதா? என் வயிற்றெரிச்சல் உன்னை ஏழேழு ஜன்மாவுக்கும், இருபத்தினான்கு தலை முறைக்கும் துரத்தியடித்துச் சபிக்குமே!"

ஐயையோ! சபையோர்களே! இந்தப் பாவிக்கு ஒரு காலத்தில் அக்கினி சாக்ஷியாக வாழ்க்கைப்பட்டு என் வாழ்க்கையே பாழாகிவிட்ட மகாபாவி நான். என் தலையில் இல்லாத பொல்லாத அபாண்டத்தையும், படாப் பழியையும் போட்டு என்னை விலக்கித் தள்ளி என்னை ஒரு விதத்திலும் உருப்படவிடாது செய்துவிட்ட படுபாவி இவன். சூதாட்டமும், குடியும் இவனுக்கு உடன்பிறந்த குணங்கள். சூதாட வேண்டாம், குடிக்க வேண்டாமென்று முட்டிக் கொண்டும் கேட்கவில்லை.

ஒரு நாள் 'சூதாடுவதை நான் போலீசாருக்குத் தெரிவித்து விடுவேன்' என்று கூறி இப்பாவியைத் திருத்த முற்பட்டதற்கு என் தலையிலேயே மண்ணைப் போட்டுப் பாறையைப் புரட்டி விட்டான். என் கதி அதோகதியாகி விட்டது. நான் கட்டுக் கதைகள் கூறவில்லை. 8 வருடத்துக்கு முன் நடந்த சம்பவத்தை பிச்சிபுரம் மணியக்காரர், கர்ணம், கிராம முனிசிப் முதலியோரைக்

கேளுங்கள் தெரியும்" என்று பத்திரகாளியைப்போல் கத்திக் கலவரம் செய்தாள். மனப்பந்தலில் ஒரே குழப்பமும் அமளியும் உண்டாகிவிட்டன.

மைனரின் தலை சுழலவாரம்பித்தது. அவனுக்கிருந்த கண் தெரியாத ஆக்ரோஷத்தில் திடீரென்று எழுந்து அங்கே மண வறையில் எரிந்து கொண்டிருந்த குத்துவிளக்கைத் தூக்கி அந்த தாதியின்மீது வீசி எறிந்தான். "அந்தோ! என்ன பரிதாபம்! என்ன அக்ரமம்! என்ன கொடுஞ் செயல்! இந்த செய்கையிலிருந்தே அந்த வேலைக்காரி சொல்லிய யாவும் உண்மையாகத்தானிருக்க வேண்டும்" என்று எல்லோருக்கும் தோன்றி விட்டதால் பெருத்த குழப்பமும், விபரீத இரைச்சலும் உண்டாகி விட்டன.

குத்துவிளக்கின் கனமென்ன, அதை எறியும் வேகமென்ன? அச்சிறு வேலைக்காரப் பெண் அதை எங்ஙனம் தாங்க முடியும்? அவள்மீது அவ்விளக்கு விழுந்த அலங்கோலத்தில் அவள் அப்படியே "ஹா! ராமா! என்னே இது பரியந்தம் ஆதரித்த போஷகர்களே! இனி என் கஷ்டம் துலைந்தது. நிம்மதியுடன் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். சபையோர்களே! இப்பாவிக்கு பகவான் சரியான வழியைக் காட்டுவார்" என்று கூறி முடிப்பதற்குள், அவள் ஸ்மரணையற்றாள்.

அடுத்த நிமிடமே அவளை வேலைக்காரர்கள் ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டார்கள். ஜமீந்தாரின் நிலை கலங்கி விட்டது. "இனி இத்தகைய படுபாவிக்குப் பெண்ணைக்கொடுக்கக் கூடாது" என்று பந்துக்கள் ஒரே பிடிவாதமாய் தடுக்க வாரம்பித்தார்கள். ராமலிங்கம் தம்பதிகளின் மனமும் வயிறும் பதைக்கிறது. "எத்தனையோ தடபுடலாக எண்ணி இருந்ததெல்லாம் பாழாகிப் பொடி சூரணமாகி விட்டதே!" என்ற திகில் பிடித்துக் கொண்டதால், அவர்கள் குழம்பிப்போய் தவிக்கிறார்கள். மனவீடு ஒரே அலங்கோலமாகி விட்டது. ஆனால் அனுசூயாவின் ஆனந்தத்திற்கோ அளவே இல்லை.

9-வது அதிகாரம்

சொப்பன உலகமும், செப்பிடு வித்தையும்

“என் இன்ப வடிவே! இணையிலா மாணிக்கமே! ஏன் உன் கண்ணில் நீர் பெருகுகிறது? ஏன் இவ்விதம் விழிக்கின்றாய்? கண்மணீ! அனுசூயா! இன்னும் ஏன் கலக்கம்?” என்று கூறியபடியே, தன்னுருயிர்க் காதலி அனுசூயாவை அணைத்துக் கொண்டு தலையைக் கோதி முகவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டான்.

அனுசூ:—அத்தான்! இது தெரியாதா? ஆநந்தக் கண்ணீரை யாரால் அடக்க முடியும்? நேற்றிரவு இத்தனை நேரம் நான் இருந்த நிலைமை என்ன! இப்போது நான் இருக்கும் நிலைமை என்ன! எல்லாம் எம்பெருமானின் லீலாவினோதமல்லவா? இம்மாதிரியும் ஒரு காலம் வருமென்று நாம் நினைத்தோமா?

மகாதேவன்:—கண்ணே! நான் கனவில்கூட நினைக்கவில்லை. நான் முதலில் இக் கல்யாணத்திற்கே வருவதாக இல்லையே. என் தாயார் கட்டாயப்படுத்தி எழுதியதால் அவள் வாக்கைத் தட்டாமல் வந்தேன். வந்துங்கூட உங்கள் வீட்டிற்கு வெகு நேரம் வரையில் நான் வரவே இல்லை. பிறகு நான் வந்தபோது நீ உன்னறையில் இருந்த கன்ராவியைக் கண்டு என்னால் சகிக்க முடியாது போய் விட்டதால் காப்பி கூடக் குடிக்காமல் போய் விட்டேன். அப்போது என் மனம் பட்ட பாட்டை இப்போது நினைத்தாலும் பயமாயிருக்கிறது.

நாவல் புஸ்தகங்களில் எல்லாம் படிக்கிறோமே, இம்மாதிரி ஒரு ஜோடி காதலிப்பதும், காதல் மணம் கைகூடாவிட்டால் தற்கொலை புரிந்து கொள்வதும் அல்லது காதலித்தவளைத் தூக்கிக் கொண்டுபோய் விடுவதும் அல்லது மணமகனைக் கொன்றோ

ஒளித்தோ தீங்கு செய்து விடுவதும், விவாக சமயத்திற்குப் பெரிய குழப்பத்தை உண்டாக்கி விடுவதும், இன்னும் எத்தனையோ விஷயங்கள் படிக்கிறோமல்லவா! 'அம்மாதிரி ஏதேனும் செய்து விடலாமா! உன்னைத் தூக்கிக் கொண்டுபோய் விடலாமா!' என்றெல்லாம் குழம்பித் தவித்தேன்.

"சீச்சி! அவ்விதம் செய்வதெல்லாம் மனுஷத்தனமா! உயர்ந்த லக்ஷியத்திற்கும், நோக்கத்திற்கும் அடுக்குமா! நாம் கொடுத்து வைத்தது இம்மட்டுந்தான் அக்ரம வழிக்குப் போகாதே. உன் காதலியும் அவளை மணந்த பாக்யவானும் நன்றாக இருக்க வேண்டுமென்று பகவானை வேண்டு. கொள்ளித்தனப்படாதே. தீய வழியில் செல்லாதே. உன் தாயைக் காப்பதையே கடமையாகக் கொள்ளு." என்றெல்லாம் என்னையே நான் தேற்றி தைரியங் கூறிக்கொண்டேன்.

எனினும் விவாக வீட்டில் என்னால் இருக்கவே முடியவில்லை. பிறகு வருவோம் என்று எண்ணி, என் வீட்டிற்குப்போய் புலம்பியபடியே படுத்துவிட்டேன். எத்தனை சமாதானம் செய்தாலும் உன்னை இழக்கும் துக்கத்தை மட்டும் என்னால் சகிக்கவே முடியவில்லை. புலம்பிப் புலம்பி அப்படியே சோர்ந்து நினைவே இல்லாது போய் விட்டது.

அனு:—ஐயையோ! சொல்வதைக் கேட்கும்போதே பயமாகவிருக்கிறதே! ஆனால் நீங்கள் இங்கு நடந்த விபரீதங்களை எல்லாம் பார்க்கவே இல்லையா! அப்படியாயின் நீங்கள் இங்கு எப்படி, எப்போது வந்தீர்கள்?

மகா :—இங்கு நடந்த விபரீதங்கள் முற்றிலும் எனக்கு இன்னும் தெரியாது. என்ன நடந்தது? அதைக் கூறு.

அனு :—(நடந்தவைகளைப் கூறிப் பின்னர்) 'எனக்கு திடீரென்று உயிர் போய்விடக் கூடாதா?' என்ற ஒரே எண்ணத்தில் நான் மிதந்து கொண்டிருந்தேன். அப்போது விடு பட்ட அமர்க்களம் கூறவே முடியாது. என் தகப்பனருக்கு என்ன தோன்றியதோ என்னவோ அது பகவானுக்குத்தான் வெளிச்சம்.

என் தகப்பனருக்குப் பந்துவும், ஆப்த நண்பரும், பெரிய பணக்காரருமாகிய சேதுராம் என்பவர் என் பிதாவுக்குச் சரியானபடி உபதேசம் செய்து "ராமலிங்கம்! இம்மாதிரி அலங்கோலம் வருமென்று யாரும் கனவில்கூட நினைக்கவில்லை. இத்தனை விபரீதத்திற்கு வந்த பிறகு இனி அந்த மனிதனுக்குப் பெண்ணைக் கொடுப்பது மிகவும் இளப்பமும், ஒழுங்கீனமுமாகும். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோன பெண்ணும் இறந்துவிட்டாள் என்று ரகஸியமாகத் தெரிந்து விட்டது.

ஆகையால் இந்த விஷயம் விபரீதமாக வந்தாலும் வரலாம். அதோடு அந்த பெண்மீது அத்தனை பெரிய சபையில் குத்துவிளக்கை எறிந்து கொலை செய்த பாவி இனி சும்மா இருக்க மாட்டான். உன்மீதும் அனுசூயாமீதும் வஞ்சங்கொண்டு அவளை யாரும் மணக்காதபடி கலகம் செய்து, அவளைத் தானே பாழ்படுத்தினாலும் படுத்தி விடுவான். ஆகையால் இந்த முகூர்த்தத்திலேயே கூடியவரையில் சுமாரான பிள்ளையைப் பார்த்து முதலில் விவாகத்தை முடித்து விடு. விவாகம் நின்றுவிட்டால் பிறகு தலை காட்ட முடியாது. என்ன சொல்லுகிறாய்? என் மிஸஸ் ராமலிங்கம்! நீ என்ன சொல்லுகிறாய்?" என்றார்.

அதற்கு என் பெற்றோர்கள் பலமாக யோசனை செய்து குழம்பித் தவித்தார்கள், பிறகு என் பிதா "திடீரென்று எந்த பிள்ளைக்கு எப்படி கொடுப்பது? அந்தஸ்து வேண்டாமா! ஐச்வர்யம் வேண்டாமா! ஜாதகம் பார்க்க வேண்டாமா?" என்று இழுத்தாராம். என் தாயாருக்கு அம்மாதிரி செய்வது சற்றும் இஷ்டமே இல்லை. அவள் பலமாக ஆக்ஷேபிக்கவாரம்பித்தாள்.

ஆனால் என் தகப்பனருக்கு உள்ளூற பயமும் திகிலும் பிடித்துக்கொண்டு விட்டது. அவர் என் தாயாருக்குப் பலவித காரணங்களை எடுத்துக் கூறி "இச்சமயம் நாம் விவாகம் செய்யாமல் விட்டுவிட்டால் பின்னர் பல விதத்திலும் நமக்குக் கஷ்டம் உண்டாகி விடுவதோடு கல்யாணமே ஆகவிடாமல் செய்து விடுவான்.

நாமோ மூளை கெட்டு அவனிடம் கடன்காரர்களாகி விட்டோம். மரியாதை தப்பி எந்த சமயம் என்ன செய்வானோ? ஆகையால் சமயத்தை வீணாக இழந்து விடாமல் நமது கவுரவமும் மானமும் இருக்கும்போதே மகாதேவனுக்கே இதே முகூர்த்தத்தில் விவாகத்தைச் செய்துவிட்டலாம். பிறகு எச்சுக்கும் பேச்சுக்கும் இளப்பமாகிவிட்டால் அவனும் மணக்க சம்மதிக்கமாட்டான். அதோடு குழந்தையின் மனது தான் தெரிந்திருக்கிறது. ஆதலால் தடை சொல்லாதே. விட்டில் பூச்சியைப்போல் நாமே விளக்கில் விழுந்துவிட்டோம். இனி தப்பிக்க வழி செய்ய வேண்டும்" என்றெல்லாம் பேசினார்.

இதை ஒட்டு கேட்டிருந்த என்னிதயம் அக்காலை எவ்விதம் பொங்கிக் களித்தது என்பதைக் கூறவே முடியவில்லை. என் தந்தை புனர் ஜென்மம் எடுத்ததுபோலத் தான் மாறிவிட்டார். சந்தர்ப்பங்களையும் பின்னால் விளையப்போகும் பயங்கரத்தையும் உத்தேசித்து என் தாயாரும் இணங்கிவிட்டாள். அதற்கு மேல் கேட்கவேண்டுமா! கல்யாணம் முடிந்துவிட்டது. ஆமாம். உங்களை யார் வந்து முதலில் கேட்டார்கள்?" என்று நகைத்தவாறு கூறியபடியே, மகாதேவனின் கரங்களைப் பற்றிக்கொண்டாள்.

மகா:—கண்மணீ! அந்த வேடிக்கையை ஏன் கேட்கிறாய்? நான் முன்பே தெரிவித்தது போல் எனது பெரும் புதையல் கொள்ளை போய்விட்டது போன்ற வேதனை தோன்றி என்னை வதை செய்து விழுங்கி விடும்போலாகி விட்டதால் இங்கிருக்கப் பிடிக்காமல் தவித்தேன். பித்தன் போல் மீண்டும் வந்து வந்து பார்த்தேன். அதற்கு மேல் என்னால் சகிக்கக்கூடவில்லை. உன்னை எப்படியாவது தனியே பார்த்து என் துயரம் தீரக் கதறிவிட்டுப் போகவேண்டுமென்ற ஆவல் ஒரு புறம் பொங்கி எழுந்தது.

அசோக வனத்தில் சோகத்துடன் உட்கார்ந்து புலம்பும் சீதையைச் சுற்றி அரக்கிகள் சூழ்ந்திருந்த படலம்போல, உன்னைச் சுற்றிக்கொண்டு ஏராளமாக ஸ்திரீகள் உட்கார்ந்து இருந்ததினால் என்னுடைய அந்த ஒரு சிறு ஆவலிலும் மண் விழுந்துவிட்டது.

அதற்குமேல் அங்கு நிற்பது சரியல்ல. கடைசீதரமாக உன்னழகிய திருவதனத்தைப் பார்த்துவிட்டுப் போய்விடவேண்டியது என்று தீர்மானித்து விட்டேன். ஏதோ ஒரு சாக்கை வைத்துக்கொண்டு அந்த அறையின் பக்கம் வந்தேன். அங்கு தடபுடல் அலங்கார வதியாக நின்றிருந்த உன் தாயார் என்னைக் கண்டதும் ஏதோ ஒரு நாயை, பூனையை மிரட்டி வெறுத்து அனுப்புவதுபோல் சீறி விழுந்து "பெண்டுகள் உட்கார்ந்திருக்கும் இந்தப் பக்கத்தில் மரியாதை இல்லாமல் ஏன் வந்தாய்? இதெல்லாங் கூடவா தெரியாது? இங்கே வராதே; போ" என்று கர்ஜனை செய்தார்கள்.

உடனே மனம் உடைந்து போய்விட்டது. எனினும் தைரியத்தை இழக்காமல் பேசத் தொடங்கி "மாமீ! நான் முட்டாள்தனமாக இங்கு வரவில்லை. உங்களை மாமா கூப்பிடுகிறார்கள். அதைத் தெரிவிக்கவே நான் வந்தேன். இதோ போய்விடுகிறேன். கோபித்துக்கொள்ளாதீர்கள்" என்று கூறிவிட்டு அந்த க்ஷணமே வேகமாக நடந்து என் வீட்டை அடைந்தேன். அப்போது சாக்காலமாகையினால் வேறு எங்கே செல்வது, என்ன செய்வது என்று ஒன்றுமே தோன்றவில்லை. பேசாமல் படுத்துக்கொண்டேன்.

மனமோ இருக்கை கொள்ளாது தவித்தது. கடவுள் மீதும் கடுங்கோபம் வரத் தொடங்கியது. என்னையே நான் எண்ணி வருத்துவதை விட உன்னுடைய எதிர்காலத்து வாழ்க்கையை எண்ணியே மிகவும் மனமுருகினேன். அதை நினைக்கும் போதெல்லாம் ஜமீந்தார் என்கிற பெரும் பூதம் உன்னை விழுங்குவது போன்ற தோற்றம் கண் முன்பு தெரிந்து என்னை சித்திரவதை செய்தது.

கவலை மிஞ்சினால் களைப்பும் தூக்கமும் சில வேளைகளில் வந்து விடுமல்லவா! அதே போல் என்னுடைதும் எண்ணி மனம் ஏங்கிப் புண்ணாகித் தவித்துக் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்த வண்ணம் மண்ணின்மீது புரண்டு என்னையறியாது நித்திரையிலாழ்ந்து விட்டேன். அடாடா! கடவுள் சற்றும் ஈவிரக்கமற்ற மனத்துடன்

மயமான உலகத்தில் தள்ளப்பட்டவன் போன்றும், மதிப்பிலாத ஆநந்தத்திலிருந்து மூழ்கி மதுவுண்டு களிகொண்டு இன்பவாரிதியில் மிதந்த என்னை சாக்கடையில் தள்ளப்பட்டது போன்றுமான வேதனைகள் சூழ்ந்து இமைப்பொழுதில் என்னை உலுக்கிவிட்டன.

கண்ணை விழித்துக்கொண்டு அலறியவாறு எழுந்து பார்த்தேன், என் பழைய குடிசையில் ஓலைப் பாயின்மீது துயரக்கட்டையைப்போல் என் சரீரம் கிடக்கக் கண்டேன். சொப்பன உலகத்தின் மகிமை நிறைந்த ஆநந்தம் முற்றும் வெட்ட வெளியான பாலைவனமாய்ப் போய்விட்டது. அலறியவாறு எழுந்து பார்க்கையில் வேறு விதமான புதிய விசித்திரக் காட்சியொன்று கண் முன்பு தோன்றியது.

அதாவது,— உன் பிதாவும், உன் பிதாவின் ஆப்த மித்திரரும், இன்னும் சில பெரியாரும் என் முன்பு இருக்கக்கண்டு மனம் பதறியவாறு எழுந்து, விஷயம் புரியாது விழித்தேன்.

உன் தந்தையின் சினேகிதரே என்னைத் தட்டி எழுப்பியவாறு "தேவா! எழுந்திரு. என்ன விழிக்கிறாய்? மணி 4 அடித்துவிட்டது. உனக்குக் கல்யாணம். உம். எழுந்திரு." என்றார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எல்லாம் கலவரமாயும், இதுவும் ஓர் துன்பக் கனவுபோலும் தோன்றியது. "இதென்ன பரிகாசம்! ஏன் இப்படிக் கூறி என்னை வருத்துகிறீர்கள்?" என்று கேட்டேன்.

அதற்கு உன் பிதா என்னிரு கைகளையும் பிடித்துக்கொண்டு "தேவா! எல்லாம் வேளையின் கூத்து. நாம் நினைப்பதொன்று; தெய்வம் நடத்துவதொன்று. தெய்வம் என்று ஒன்று இருக்கிறது என்பதைச் சற்றும் அறியாது திமிர் படைத்து நடந்தவர்களுக்கு கடவுள் கண் முன்பே புத்தி கற்பித்து விட்டார். இப்போது எதுவும் பேச சாவகாசம் கிடையாது. தேவா! எழுந்திரு. நானும் உன் மாமியும் ஏதாவது தவறுகள் செய்திருந்தால் அவைகளை மன்னித்து மறந்து விடு. உன்னுருயிர்க் காதலி அநுரூபாவை நீயே மணந்து சுகமே வாழுங்கள். எழுந்து வா.

இதே முகூர்த்தத்தில் விவாகத்தை முடித்துவிட வேண்டும்; பிறகு பேசிக் கொள்ளலாம்" என்றார்.

என் தாயாருக்குண்டாகிய சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. என்னைப்பற்றிக் கேட்க வேண்டுமா! ஒரே குதி குதித்துக் கொண்டு எழுந்து சென்றேன். விவாகம் நடந்த பிறகே ஜமீந்தாரின் செய்திகள் தெரிய வந்தன. நாம் இருவரும் ஒன்று சேர்ந்தோம் என்ற சந்தோஷம் அபாரமாகப் பொங்கிய போதிலும், அந்த துஷ்ட ஜமீந்தார் தன்னுடைய ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளாது விடுவானா என்ற சந்தேகம் என் மனத்தில் சதா பொங்கித் தவிக்கிறது. கடவுள் எவ்வழிதான் விடப் போகிறாரோ! அத்துஷ்டனின் தூர்க் குணத்திற்கு என்ன தான் பலன் கொடுத்து, அவன் கர்வத்தை அடக்கப் போகிறாரோ!" என்றான்.

அனு :—அத்தான்! இது பரியந்தம் நடத்திக் கொண்டு வந்த பகவான் இனியும் தன் போக்கில் நடத்திக் கொண்டு போகாமல் விடுவானா! நாம் ஏன் அதைக் குறித்துக் கவலைப் படவேண்டும்? என்னைப் படுகுழியில் தள்ளாது காத்தாரே அதுவே எனக்குப் போதும். முன்னர் கஷ்டப்பட்டவர்கள் பின்னர் சுகப்படுவார்கள் என்ற பழமொழியை நாம் கண்ணுறக் கண்டோம்.

மகா :—என்ன சுகம் போ! நான் லக்ஷாதிபதியா? ஏதோ பிச்சைக்காரன், தொத்து வியாதியைப்போன்ற தரித்திரனுக்குத் தள்ளிவிட்டோமே என்று உன் தாயின் மனம் வருந்தாமலிருக்குமா?....என்று குறும்பாகக் கூறிக்கொண்டே, அனுசூயாவைத் தட்டிக் கொடுத்தான்.

அனு :—இந்த நிந்தாஸ்துதி யாருக்கு வேண்டும்? தாயின் எண்ணமும் தந்தையின் எண்ணமும் இப்போது ஒன்றாகத்தான் ஆய்விட்டதே. பழைய விஷயத்தை ஏன் ஞாபகப்படுத்த வேண்டும்? நீங்கள் தான் என்னுடைய பொக்கிஷமாயிருக்கையில் இன்னும் வேறு லக்ஷம் எதற்கு? நான் அப்படி ஆசைப்படவில்லை. கடவுள் கிருபையால் இனி எவ்விதமான ஆபத்தும் இல்லாமல் நாம் என்றும்

இப்படியே இணை பிரியாத நேசத்துடன் இருந்து, காலம் முடிந்தால் போதும். நான் வறுமைக்கும் தரித்திரத்திற்கும் பயப்படவே இல்லை. அதைப்பற்றி நீங்களும் கவலைப்பட்டவே வேண்டாம்— என்றாள். அவளுடைய த்வனியிலும், கண்களிலும் ஜ்வலித்த பிரகாசத்தையும் அழுத்தத்தையுங் கண்டு மகாதேவனின் உள்ளம் பூரித்தது.

அதே சமயம் மிகவும் கடினமான ஓர் குரல் சாளரத்தின் பக்கமாக ஒலித்து 'ஆம்; இனி எதற்கும் பயப்பட வேண்டாம். ஆனால் உங்கள் இன்ப வாழ்க்கைக்கு எமன் இல்லாமலில்லை என்பதை மட்டும் மறக்க வேண்டாம். அந்த எமனிடம் பயம் இருக்கட்டும். உங்கள் வாழ்க்கை இனிது நடக்க வேண்டுமாயின் அனுசூயா! இதோ இதில் கையொப்பமிடு." என்று கூறிக் கொண்டே, பயங்கர ஸ்வரூபத்தையுடைய மைனர் ஜமீந்தார் வந்த உடனே, காட்டில் எதேச்சாதிகாரமாகச் சஞ்சரிக்கும் மான் குட்டிகள் சிம்மத்தின் கர்ஜனையைக் கேட்டு, மிரண்டு தத்தளிப்பதே போல் இவ்விரு காதலர்களும் கதி கலங்கிப் போய், இடிந்த மனத்துடன் அலறி யடித்துக்கொண்டு எழுந்து நின்றார்கள். அனுசூயாவின் ஆநந்தம் அப்படியே தீயாக மாறி எரிவதேபோல் தோன்றிய உணர்ச்சியுடன் சுருண்டு மகாதேவனின்மீது சாய்ந்தாள்.

10-வது அதிகாரம்

கொள்ளிவாய்ப் பேயின் கொடிய தாண்டவம்

திடீரென்று ஆகாயம் இருண்டது. இடியும், காற்றும், மின்னலும் பலத்து மழை பொழியவாரம்பித்தது. அடுக்கு மாளிகைகளில் படுத்திருப்போருக்கு இக் கவலையைப்பற்றி சிந்தனைகூட இல்லை. குடிசையில் தேகத்தை மூடிக் கொள்ளவும் சரியானபடி கந்தைகூட இல்லாமல் தத்தளிக்கும் ஆத்மாக்களுக்கன்றோ இக்காத்து மழையின் வேகமும் இதன் பலாபலனும் தெரியும்?

திவான்பகதூர் ராமலிங்கத்தின் மில்லில் வேலை செய்யும் சிறிய சம்பள வேலையாட்களுக்கெல்லாம் முன்பிருந்த எஜமானர் மில்லுக்குப் பக்கத்திலேயே வரிசையாக குடிசைகள் போட்டுக் கொடுத்திருந்தார். திவான்பகதூர் ராமலிங்கமும் அதேமாதிரி செய்து வந்தார். கூலிகளும் வெகு சந்தோஷத்துடன் குடிசைகளில் வசித்து வந்தார்கள். கல்யாண விஷயத்தில் தகராறுகள் வந்த பிறகு மில்லின் வேலையில் ஜமீந்தாரே அதிகப்படியாகத் தலை யிட்டுக் கவனித்து வருவதைப் பார்த்ததும் கூலிகளுக்கு ஒருவித மான குழப்பம் உண்டாகி விட்டது.

அவர்களுக்குள் ஒரு தினம் ஒரு சிறிய கூட்டம் போட்டு பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். இரவு போஜனத்திற்குப் பிறகு நிலவில் கூடினார்கள். வேலைக்காரர்களில் முதன்மை யானவன் மற்றவர்களை நோக்கி, "தோழர்களே! இப்போது நமது மில்லின் நிர்வாகப் பொறுப்பைப் பார்த்தால் சந்தேக மாகவே இருக்கிறது. நோய் வாய்ப்பட்டு குணமாகி வந்திருக்கும் மைனருக்கு, தனக்குப் பெண்ணைக் கொடுக்கவில்லை என்ற ஆத் திரம் அதிகமாக இருக்கிறது. அதனால் எந்த சமயம் எப்படி நடக்குமோ தெரியாது. இவர்களுக்குள் தகராறு ஏற்பட்டால் நடுவாந்தரத்தில் நம்ப பிழைப்பு எப்படியாவது? நம்பளுக்கு இன்னும் அதிக சம்பளம் குடுப்பதாகச் சொல்கிறார்களேயன்றி கொடுக்கும் வழியும் காணவில்லை.

இவர்கள் மனஸ்தாபம் எப்படியாவது போகட்டும். நாம்ப வந்த வரைக்கும் போரும்னு இங்கேயே இருக்கலாமா? அல்லது ஏலப்பட்டியில் ஒரு புதிய ஆலை ஆரம்பிக்கப்போகிறார்களாம். நாம் எல்லாம் அங்கே போய்விடலாமா! உங்கள் அபிப்பிரா யத்தைச் சொல்லுங்கள்." என்றான்.

அதில் ஒருவன் எழுந்து "ஏங்க யார் எப்படி வேணுமானாலும் சண்டை போட்டுகிட்டுங்க. நமக்கு சம்பளம் அதிகம் குடுக்கும்படி கேப்போம். குடுத்தா வேலை செய்யலாம், இல்லாபூட்டா எல்லோரும் வேலை நிறுத்தம் செய்வோம். அதற்கும் ஒன்னு

மில்லேன்னு அந்த புதிய ஆலைக்கே போயுடுவோம். என்ன சொல்றீங்க?" என்றான். அதையே எல்லோரும் ஆமோதித்துப் பேசி முடிப்பதற்குள் மேற் சொல்லியவாறு மழை வந்து விட்டது. அடிக்கும் விபரீதமான காற்று குடிசைகளின் மேல் கூரையாகிய ஓலைகளை அப்படியப்படியே பிய்த்துக்கொண்டு போகின்றது.

உள்ளே படுத்திருக்கும் குழந்தையுங் குட்டியும், பெண் பிள்ளைகளும் பெரிய கூச்சலுடன், ஒடுக்கும் குளிர் தாங்காமல் ஓடி வந்தார்கள். குழந்தைகளெல்லாம் குளிரில் விரைத்துப் போய் விட்டன. "ஐயோ! எங்கே தங்குவது? காத்து சுழட்டி சுழட்டி அடிக்கிறதே!" என்று கூச்சலிட்டார்கள். அங்கு சிறிது தூரத்திலுள்ள சத்திரத்தை நோக்கி எல்லோரும் ஓடவாரம் பித்தார்கள். அவர்களின் பரிதாபமும் அல்லகல்லோலமும் பார்க்கவே முடியவில்லை.

மறு தினம் பொழுது விடிந்ததும் எங்கு பார்த்தாலும் ஒரே விபரீதக் காட்சியாக விருந்தது. காற்று மழையின் கொடு மையான ஆட்சியில் பல குடிசைகள் ஆகாயத்தில் காற்றாடிபோல் பறந்துபோய் விட்டன. எத்தனையோ மரங்கள் காற்றில் வேரோடு விழுந்து கிடந்தன. இயற்கை தேவியின் சீற்றத்தின் வேகம் அவ்வூரையே அலங்கோலமாக்கி விட்டது. சூரிய சந்திராதிகள் வாஸம் செய்த குடிசையாயினும் எத்தனையோ சந்தோஷத்துடன் அக் குடிசைகளையே பெருத்த மாடமாளிகை களாக எண்ணி இருந்த ஏழைகளுக்கு அவையும் போய்விட்டதால் தாங்கக்கூடாத பெரும் துக்கம் பொங்கி எல்லோரும் ஏக கும்பலாக இரைச்சல் போட்டுக் கத்திப் புலம்புகிறார்கள்.

அச்சமயம் அவ்வழியாக வந்த மைனர் ஜமீந்தார் மில்லின் தொழிலாளிகள் படும் துன்பத்தைப் பார்க்க மிகவும் பரிதாபப் படுவதுபோல் கண்ணீரும் வடித்துக் கொண்டே "பரசுராமா! இதென்ன அநியாயம்! உலகத்தில் அக்ரமமும், பொய்யும், சூதும், கொலையும், களவும் அதிகரித்துவிட்டன. அதனால்தான் கடவுளுக்குத் தாங்காமல் இத்தகைய பெரிய ஆபத்துக்களை

எல்லாம் உண்டாக்கி விட்டார். ஐயோ பாவம்! உங்களைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக விருக்கிறது. இரவு முற்றும் நீங்கள் என்ன கஷ்டப்பட்டீர்களோ! உங்கள் எஜமானர் வந்து பார்த்தாரா!" என்று நைஸாகக் கேட்டார்.

கூலிகள் அழுதுகொண்டே "சாமீ எசமானே! நீங்க காட்ற தயவுகூட அவரு காட்டலீங்க. அவரு இன்னும் இந்த பக்கம் வந்து இந்த கயிதெங்களைப் பாத்ததே இல்லீங்க. இன்னிக்கு மட்டும் வருவாருங்களா! என்னமோ சாமியே நம்பிக் கிட்டு இருக்கற எங்களைகூட சாமி சோதனை பாக்கராரே! நாங்க என்ன பண்ணுவோம் சாமீ! எங்களுக்கு நிக்கறதுக்கூட சாண் நெழலில்லீங்களே! புள்ளெ குட்டிக்காரங்க நாங்க என்ன செய்வோங்க?" என்று கண்ணீர் விட்டுக் கதறினர்கள்.

அதே சமயம் "குளுருதே! ஒடம்பெல்லாம் நடுக்குதே." என்று நாலைந்து குழந்தைகள் ஓடிவந்து கட்டிக்கொண்டன. கூலிப் பெண்களும் "சாமீ! ஏயெமேலே தயவு காட்டி குடிசெ கட்டி தரச் சொல்லணும். கொயந்தெங்கல்லாம் சாவப் போராப் பலேக் கீதுங்க. ஒங்க புண்ணியத்துலே தானுங்க நாங்க பொயக் கணும். பானையிலே இருந்த அரிசி எல்லாம் பானை ஒடஞ்சி மண்ணோடு பூட்டுதுங்க. கஞ்சிகூட இல்லேங்க" என்று முறை யிட்டார்கள்.

இவைகளை எல்லாம் பார்த்த ஜமீந்தார் மிக்க விசனிப்பவர் போல் தடபுடல் பாசாங்கு செய்து கண்ணையும் மூக்கையும் கை குட்டையால் துடைத்துக்கொண்டு அந்த ஏழைகளை நோக்கி "ஐயோ! கண்றாவியை என்னால் கண்டு சகிக்கவே முடியவில்லை. என் மனம் தத்தளிக்கிறது. நான் என்ன செய்வேன்? உங்க எஜமான் காலிலே எல்லோரும் போய் விழுந்து கதறுங்கள். குடிசை போட்டுத் தரும்படியும், உங்கள் சம்பளத்தில் பாதியாவது இப்போது இச் சமயத்திற்குக் கொடுத்து உதவும்படிக்கும் வேண்டிக் கொள்ளுங்கள். அவர் ஏதாவது செய்வார். அப்படி செய்யவில்லை என்றால் வேலை நிறுத்தம் செய்வோம் என்று

நீங்கள் பயமுறுத்தி, இன்று வேலைக்குப் போகாதிருங்கள். ஆலையில் நஷ்டம் வந்தால் உடனே எல்லாம் சரியாகி, ஆள் உங்கள் வசமாகி விடுவார். இந்த 10 ரூபாயை மாற்றி காலையாகார மாவது ஏதேனும் வாங்கிச் சாப்பிடுங்கள். நாளை வந்து நான் பார்க்கிறேன். தைரியமாய் காரியத்தைச் செய்யுங்கள்." என்று தூண்டிவிட்டார்.

கூலிகளின் தலைவன் :—எஜமான்! அப்படி செய்தாக்கா ஒரு வேளை வேறு கூலிகளை வெச்சு வேலை வாங்கினா என்ன செய்றதுங்க. அப்பாலே சோத்து வாயில் மண்ணல்ல வியுந் தூடும்?

ஜமீந் :—அந்த பயம் ஒங்களுக்கு வேண்டாம். நான் சொல்றபடி கேளுங்கள். வேறு ஆள் யாரும் அங்கு வரமாட் டார்கள். நீங்கள் தைரியமாய்ப் போய் கேட்டு வேலை நிறுத் தமும் செய்யுங்கள். நாளையே அதன் பலன் தெரியும்; பாருங்க ளேன். கோழைத்தனம் மட்டும் வேண்டாம்.

பெண்கள் :—எஜமான் சொல்றத்தைத்தாங் கேக்கலாமே! எஜமான் சொல்றது நடக்காட்டி போனா எஜமானே கஞ்சி ஊத்த வழி செய்யமாட்டாரா! நீங்க ஏம் பயப்படணும்? வாங்க இப்பவே களம்பிப் போலாம். எஜமான் சொல்றது சரியான ரோஜனை தானுங்க—என்று கூறிக்கொண்டே, குழந்தைகளையும் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு கிளம்பினார்கள்.

ஜமீந்தார் அந்த தொழிலாளிகளின் தலைவனுக்குச் சரி யானபடி தூபம் போட்டு ஊக்கத்தைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார். அத்தொழிலாளிகள் ஆணும், பெண்ணுமாக ஓர் பெருங் கூட்டங் கூடிச் சென்றார்கள்.

திவான்பகதூர் வீட்டில் அப்போதுதான் அவர் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வெளியில் கிளம்புவதற்குத் தயாராக விருந்தார். அச்சமயம் அவர் தர்ம பத்தினியாகிய அலங்காரவதி குப்பம்மாள் கையில் தாம்பூலத் தட்டுடன் திவான்பகதூரின் பின்னாலேயே வந்தாள். அவளை அப்போது

பார்த்த எவருக்கும் "அந்தம்மாள் மிஸஸ் ராமலிங்கம்தானா, அல்லது வேறு யாரேனுமா?" என்ற பெரிய சந்தேகம் உண்டாகி விடும்படி மிகவும் கர்னாடகமாக, முன்னோர்களின் முறைப்படியான பழைய அலங்காரவழியாய்க் காணப்பட்ட ஆச்சரியம் கூறவே திறமன்று.

நடல்புடலான அலங்காரச் சின்னங்களெல்லாம் எந்த குளத்தில் மறைந்து கொண்டதோவென்று ஐயுறும்படி பழைய பெரிய கரை போட்ட கொரநாட்டுப் புடவை, தலையில் கழுத்தின் மீது படுத்திருக்கும்படியான கோடலி முடிச்சு, நேர் வகிடு, பெரியதாக குங்குமப்பொட்டு, கழுத்து மூடி பித்தான் வைத்து முழங்கைக்கு மேலோடு தழைந்த கரைபோட்ட ரவிக்கை, கழுத்தில் இரண்டு மூன்று சங்கிலிகள், கையில் நாலைந்து வளையல்கள், ஜாதியாசாரப்படி மடிப்பு போட்டு கட்டியிருக்கும் சேலை, காதில் தோடு மட்டும், மூக்குத்தியே பாராதிருந்த மூக்கில் கொட்டைபோல் திருகாணி இத்தனை அலங்காரத்துடன் அம்மாள் ப்ரஸன்னமானாள்.

கால்சட்டை மேல் சட்டை, வெள்ளைக்கார டொப்பி இவைகளையே தான் வணங்கும் முழு முதற் கடவுளாக எண்ணி இருந்த திவான்பகதூரும் நேர்மாறுகப் பஞ்ச கச்சம் போட்ட சரிகை வேஷ்டி, கோட்டு, தலைப்பாகை, உருமால் முதலியவைகளுடன் கிளம்பினர். குப்பம்மாள் மடித்திருந்த வெத்திலைச் சுருளை அவர் கையில் கொடுத்தபடியே "என்ன! அந்தப் பாழும் மைனருக்கு என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்? இப்படி கடிபுடியாய் மூளை இல்லாது கடிதமெழுதி விட்டானே!" என்றாள்.

திவான்:—அதற்காகத் தான் இப்போது ஒரு பெரிய மனிதரைப் பார்க்கப்போகிறேன். எப்பாடாவது பட்டு அந்த மைனரின் பணத்தைக் கொடுத்துத் தொலைத்துவிட்டால் போதும். ஒரு ப்ரபல வியாபாரியைப் பார்த்து அந்த தொகை வரையிலாவது கடனுக வாங்கி அவனுக்குக் கொடுத்துவிட்டால் எப்படியாவது பிறகு நடத்திக்கொள்ளலாம்.

குப்ப:—விளையாட்டு போல் இத்தனை வருடங்களாகிவிட்டன பாருங்கள். அதற்கு வட்டியே தலைச்சுமைபோல் ஏறியிருக்குமே! இதுகால பரியந்தம் அவன் காத்திருப்பதற்குக் காரணம் ஏதோ உள்ளுக்குள் சூழ்ச்சி இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அதோடு இன்னொரு பயம் என்னைக் கொல்லுகிறது. அந்த மைனர் அடிக்கடி மகாதேவனைக் கண்டு ஏதேதோ பேசி பயமுறுத்துகிறான். அதைக் கண்டு குழந்தை அனுசூயாவும் பயப்படுகிறாள். அதோடு அவனுக்கிருக்கும் ஆத்திரத்தில் அனுசூயாவின் இரட்டைக் குழந்தைகளை எங்கே மென்னியைப் பிடித்து விடுவானோ என்கிற பயமும் வதைக்கிறது.

திவான்:—இனிமேல் பயந்து என்ன செய்வது? முதலிலிருந்தே நாம் கோணல் வழியில் நடந்துவிட்டதன் விளைவு இப்போது வாட்டுகிறது. வந்தவைகளை எல்லாம் அனுபவித்துத் தானே தீரவேண்டும். சரி, நான் வெளியில் சென்று வருகிறேன்—என்றார். அப்போது அனுசூயா தன் இருதோள்கள் மீது இரு குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு வந்தாள்.

திவான்பகதூர் முதலியார் பொங்கி எழும் ஆசையுடன் இரு குழந்தைகளையும் மாறி மாறித் தூக்கிக் கொஞ்சிக் குலாவி முத்தமிட்டு விட்டு "அம்மா! நான் வெளியில் போய் வருகிறேன்" என்று சொல்கையில் அவசரமாகவும், கவலையுடனும் வந்த மகாதேவனை நோக்கி "மகாதேவா! ராத்திரி காற்று மழையில் ஒன்றும் சேதமில்லாதிருக்கிறதா? மில்லில் போய் பார்த்தாயா?" என்றார்.

மகா:—ஆம், மாமா! அதைக் கூறத்தான் வந்தேன். போய் பார்த்தேன். மேலே இருக்கும் வெண்டிலேடர் கதவுகளை எல்லாம் நேற்று வழக்கம்போல் பூட்டிவிட்டுத் தான் வேலைக்காரர்கள் சென்றார்கள். அதை யார் எப்போது எப்படி திறந்துவிட்டார்களோ தெரியவில்லை. கண்ணாடி ஜன்னல் கதவுகளெல்லாம் நொருங்கிப் போய் சிதறிக் கிடக்கின்றன. ஜன்னல் வழியால் தண்ணீர் உள்ளே ஏராளமாக வந்து பருத்தி மூட்டைகளெல்லாம் நனைந்து போய் கிடக்கின்றன. மெஷின்களின்

மீதெல்லாம் ஜலம் பாய்ந்து கிடக்கிறது: துணிமூட்டை கிடங்கு பக்கத்து ஜன்னல் கதவுகளும் எப்படியோ திறந்திருந்ததால் சாறல் அடித்து, சில மூட்டைகள்மீது ஜலம் பட்டுக் கிடக்கிறது. கிடங்குக்குள்ளிருக்கும் பஞ்சும் துணியுந்தான் சரியாக விருக்கின்றன. இம்மாதிரி வேண்டுமென்று இதை யாரோ செய்திருப்பதாகவே தோன்றுகிறது.—

என்று மகாதேவன் முடிப்பதற்குள் "ஹா! என்ன! என்ன! வெளியிலிருந்த பஞ்சு மூட்டைகளும், துணிகளும் நனைந்து பாழாகி விட்டனவா? ஐயயோ! இது வேண்டுமென்றே செய்த சதிபோலல்லவா தோன்றுகிறது? நான் கடைசியில் மில் கதவு மூடும்போதே எல்லாவற்றையும் கவனித்தேன். சகல ஜன்னல்களும் மூடி இருந்ததை என் கண்ணுறக் கண்டேனே. இப்போது எப்படி இம்மாதிரி அலங்கோலமாகிக் கிடக்கும்? ஐயோ! இது சற்றும் ஆக்ஷேபனை இன்றி யாரோ செய்துள்ள சதி; வேண்டுமென்று செய்த வஞ்சந்தான். ஹா! என்ன சோதனை!" என்று ராமலிங்கம் தலைமீது மலை புரண்டு விட்டதுபோல் இடிந்து விட்டார்.

குப்பம்மாளுக்கும் தலை சுழல வாரம்பித்தது. அனுசூயாவுக்கும் ஷாக்கடித்தது போலான வேதனை உண்டாகியது; எனினும் இம்மாதிரியும் இதற்கு மேலானதுமான விபரீதங்கள் வருமென்று அவள் பயந்து எதிர் பார்த்ததே யாகையால் இச் சதி முற்றும் மைனரால் தான் விளைந்ததென்று நிமிடத்தில் ஊகித்தறிந்து கொண்டாள்.

அனு:—அப்பா! ஆதி முதல் நான் அந்த படுபாவியின் சம்மந்தம் வேண்டாமென்று எத்தனையோ தரம் சொல்லிய போதெல்லாம் அவ்வார்த்தைகள் விஷம்போல் தோன்றின. இப்போது அதன் விளைவுகள் நன்றாகத் தெரிகிறது. விவாகமாகிய உடனே நாங்களிருவரும் படுக்கையறையில் பேசிக் கொண்டிருக்கையில் உள்ளே எப்படியோ குதித்து 'இக்கடிதத்தில் கையெழுத்துப் போட்டால் உங்களை விடுவேன்; இல்லையேல்

கொலை செய்து விடுவேன்' என்று சொன்ன துராத்மாவல்லவா அவன் !

அன்று அச்சமயத்திற்குச் சரியாய் வீட்டில் பாம்பு வந்ததும், கிழவியைக் கடித்ததும், கலைப யுண்டாகி எல்லோரும் ஏக காலத்தில் விழித்துக்கொண்டு சந்தடி ஏற்பட்டு விட்டதனால் அவன் திருடன்போலவே ஓட்டமாக ஓடி மறைந்து விட்டான். அந்த சம்பவம் அன்று கடவுளால் ஏற்படாதிருந்தால் எங்கள் கதி என்னவாகி இருக்குமோ ? அவனால் கூடிய வரையில் நம்மை வதைத்து இம்சிக்கவே கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறான். இருக்கட்டும். அதோ என்ன பெருங் கூட்டமாக வருகிறது ?" என்றாள்.

அதே சமயம் நாம் முன்பு தெரிவித்தபடி ஆலைத் தொழிலாளிகள் " எஜமான் ! ஏழெங்களெ காப்பாத்தணும். எஜமான் ஏயெங்களுக்கு கஞ்சி வாக்கணும். கொயந்தெ குட்டியோடே நாங்க செத்துகிட்டு கடக்கிரோம். கருணை காட்டணும்" என்று கூறிக்கொண்டே அத்தனை பேர்களும் கீழே விழுந்து கும்பிடு போட்டார்கள். அந்த பெருங் கூட்டத்தின் அலறல் ஆகாயத்தை யளாவியது.

திவான் "என்னப்பா! என்ன சமாச்சாரம்? ஏன் கதறுகிறீர்கள் ?" என்றதற்குள், அனுசூயா வேலைக்காரியிடம் குழந்தைகளைக் கொடுத்துவிட்டு ஓட்டமாக ஓடி வந்து, "என்னப்பா! என்ன சமாச்சாரம்? கத்தாமல் அழாமல் சொல்லுங்கள்." என்றாள். குப்பம்மாளுக்குத் தொண்டையே அடைத்து விட்டது. பேச மாட்டாது மிரள மிரள விழித்துக் கொண்டே நின்று விட்டாள்.

தொழிலாளர்கள் :—" எஜமான் ! ராத்திரி வந்த காத்து மழையின் கொடுமையிலே எங்க குடிசெங்க அப்படியே பிச்சிகினுபூட்டுதுங்க. தண்ணி உள்ளாற வந்து தத்தளமாய்ப் பூட்டுதுங்க. சட்டி பானெ எல்லாம் உருண்டு ஒடஞ்சி பண்டமெல்லாம் பாயாபூட்டுதுங்க. காலேலேந்து கொயந்தைகளுக்கு கஞ்சி இல்லாமெ சாவுதுங்க. எஜமான் ! ஏழெங்களுக்கு வழி சேஞ்சா

தான் பொயக்க முடியும். குடிசை கட்டி குடுங்க. பாதி சம்பள மாவது இப்ப குடுத்தாதானுங்க கால் வயிறு கஞ்சிக்கு சாமானும் சட்டி பானெயும் வாங்கலாம்" என்று சொன்னதைக் கேட்டதும் திவான் பகதூருக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏற்கெனவே மில்லில் ஏற்பட்ட நஷ்டத்தைக் கேட்டு இடிந்துபோயிருந்த அவருக்கு ஆகாசமும் பூமியும் ஒன்ருகச் சுழலவாரம்பித்து விட்டன. மூளேயே சிதறிவிட்டதுபோன்ற அதிர்ச்சி ஏற்பட்ட தால் ப்ரமை பிடித்து நின்ருர். பிறகு சற்று சமாளித்தவராய் "தொழிலாளிகளே! நீங்கள் பயப்பட வேண்டாம்; குடிசை போட்டுத் தருகிறேன். உங்கள் தொழிலே நீங்கள் செய்யப் போங்கள். திடீரென்று இன்று இத்தனே பேர்களும் பாதிச் சம்பளத்தைக் கேட்டால் எப்படி தர முடியும்? நான் இன்று உங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைத் தரும்படி ஏற்பாடு செய் கிறேன். சற்று நிதானித்து நீங்கள் கேட்டபடியே செய்கிறேன். அவசரப்படாதீர்கள். மில்லிலும் யாருடைய சதியினலோ பெருத்த நஷ்டம் உண்டாகி இருக்கிறதாம். நான் இப்போது அங்கு தான் ஓடுகிறேன். தயவு செய்து நீங்கள் பயப்படாது வாருங்கள்" என்று சாந்தமாகவே கூறினர்.

தொழிலாளர் :—ஒ! எஜமான்! இனிமே அப்படி நாங்க ஏமாறமாட்டோம். சம்பளம் ஒசத்தரேன்னு சொன்னீங்க. இன்னும் அதைப் பத்தி பேச்சே இல்லே. இன்னிக்கி நீங்க ஆகாரங் கொடுத்துட்டா ஆய்பூட்டுதா! நாங்க கட்ட கந்தை இல்லாமெயும், குடிக்க கூழில்லாமெயும் சாவச்சே வேலே செய்ய எப்படி வருதுங்க? எங்களுக்கு சம்பளத்தையும் ஒசத்தி, அரை மாசத்துச் சம்பளத்தை இப்போ கையிலே வச்சாதான் வேலேக்கு வருவோம். இல்லாங்காட்டிப்போனு கட்டாயம் நாங்க வேலே நிறுத்தந்தான் சேவோம். வேறே எங்கேயோ புது மில்லே ஆரம்பிக்கராங்களாம். அங்கே இப்பவே நடந்து காட்டிடுவோம். எஜமான்! ஏயெங்க வயித்திலே அடிக்காதீங்க—என்று கதறியவாறு அழுத்தமான குரலில் பிடிவாதமாகக் கேட்டார்கள். ஐயோ பாவம்! இப்போது திவான்பகதூர் என்ன செய்வார்! இத்த

ளையும் கலகத் தீயின் வேகத்தினால் உண்டாகிய பூகம்பந்தான் என்பது அனுசூயாவுக்கும், தேவனுக்கும் தெட்டனத் தெரிந்து விட்டது.

சுப்பம்மாள் உட்கார்ந்திருந்த இடத்திலேயே, வேலை நிறுத்தம் என்றதைக் கேட்ட அதிர்ச்சியினால் சாய்ந்துவிட்டாள். திவான்பகதூர் கலங்கி, நின்ற இடத்திலேயே தூணோடு தூணகச் சாய்ந்துவிட்டார். "என்னே வஞ்சகச் சூழ்ச்சியின் விபரீத ஆட்சி! இந்த ஆபத்துக் கால வெள்ளத்தை எந்த யோசனையாகிய அணையினால் தடுக்க முடியும்?" என்ற பெரும் திகில் கொண்டு தம்பதிகளிருவரும் குழம்பிப்போய் விட்டார்கள்.

11-வது அதிகாரம்

விதியின் வேகம் - வைராக்கிய தாகம்

ஓர் பெரிய பூகம்பம் வந்த பிறகு அவ்விடத்தில் நாம் காண்பன எவை? பள்ளங்கள் மேடாதலும், மேடுகள் பள்ளமாதலும், மாடமாளிகைகள் இடிந்து பிடிசூர்ண மாக இருத்தலும், இதுபரியந்தம் காணுதிருந்த ஒரு புதிய கட்டிடம் எழுந்திருப்பதும், ஜனங்களின் அலங்கோல மரணமுமே.

அதே போல் பெரும் புசல் காற்று வந்த பின்னர் நாம் காணும் காக்ஷி, வேரோடு பிடுங்கிக்கொண்டு விழுந்து கிடக்கும் மரங்களும், கூரைகள் பிய்த்துக்கொண்டு போன குட்டிச்சுவர் வீடுகளும், இறந்து கிடக்கும் ஜீவன்களின் பிணக் குவியலுந்தான்.

பெரும் வெள்ளம் புரண்டோடிய பிறகு சின்னபின்னமாகச் சிதறுண்டு மணல் பரப்பாகிய நிலங்களையும், கரைந்துபோன மண் மேடுகளையும், தண்ணீரில் அடித்துக்கொண்டு போன ஆடு மாடு முதலிய பிராணிகளையும், நிற்க நிழலின்றித் தவிக்கும்

மக்களின் பரிதாபத்தையும் இதுபோல் இன்னும் பலவிதமான கோரக் காட்சிகளையுந்தான் காணலாம்.

நெருப்பு பிடித்துக்கொண்டு எரிந்த பிறகு அவ்விடத்தில் எரிந்து தணிந்த சாம்பலையும், பாதி எரிந்து அவிந்த குறைக் கொள்ளிகளையும், அலங்கோல கோர சம்பவத்தில் தத்தளிக்கும் ஜனங்களையும், அக்கினி பகவானுக்கே இரையாகி எமனுலகேகிய பிணங்களையும் இதுபோல பலவித பரிதாபங்களையுந் தான் காண முடியும்.

யானை புகுந்த கரும்பு ஆலையும், கள்ளன் புகுந்த பண்டக சாலையும் என்பது பழமொழி. மேலே குறித்த நான்கு, இவ்விரண்டையும் விட மோசமானவை. அவைகள் எல்லாவற்றையும் விடப் படுமோசமானதும், மேற்குறித்த யாவும் ஒன்று சேர்ந்து பயங்கர ஸ்வரூபமாகத் தோன்றி அடியோடு படுகுழியில் ஆளைத் தள்ளிக் கொலை செய்வதற்கு ஒப்பானதுமான விஷம், பகை, வஞ்சனை, பொறாமை, கடன்காரன் ஆகியவைகள் தான் என்பதைக் கூறவும் வேண்டுமா ?

மேற்குறித்தவைகளால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும் விட அதிகமானவைகள் இவைகளால் உண்டாவதும், மக்கள் அல்லல் படுவதும் சகஜமாகவும் கண்கூடாகக் காண்பதாயும் இருக்கிறதல்லவா ? திவான்பகதூரின் குடும்பம் மட்டும் ஜமீந்தாரின் பகைமை, க்ஷாத்திரம், வஞ்சம், பொறாமை முதலியவற்றிற்கு இரையாகாமலிருக்க விதி விலக்கு உண்டாகுமா ?

நாம் முன்னதிகாரத்தில் தெரிவித்த விஷயத்திற்குப் பிறகு, திவான்பகதூரின் குடும்பம் சிதறுண்டு விட்டதென்று கூறுவது மிகையாகாது. தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்ததும், தொழிற்சாலையில் மழையினால் ஏற்பட்ட நஷ்டமும் ஜமீந்தாரின் சூழ்ச்சிகள் என்றும், அவர் வெற்றி பெற்றுவிட்டார் என்றும் கூறவேண்டுமா ? போதாததற்கு கடன் கொடுத்திருந்த பாணப் பிரயோகத்தைப் பிரயோகித்து தன் முழுத்திறமையையும் காட்டி

திவான்பகதூரின் தலை குனியச் செய்து இந்த வழக்கு நீதிஸ்தலம் வரையில் சென்று ஒரு கை பார்க்க நினைத்தார்.

ஆனால் அவ்வளவு தூரம் விவகாரம் செல்வதற்கு திவான் பகதூர் இடங்கொடுக்காமல் மில்லுக்கும் ஜமீந்தார் கடனுக்கும் இன்னும் இதர கடன்களுக்கும் ஒருவாறு சரி கட்டிக்கொண்டு சண்டையும் பூசலும் அவமானமும் இல்லாமல் விலகிவிட்டார். இத்தனை நாட்களின் அட்டகாஸமானதும் ஆடம்பரமானதுமான வாழ்க்கையின் இறுதிப் பலன் என்ன கிடைத்தது? தலைப்பை உதறித் தலைமீது போட்டுக்கொண்டு, ஹரோ ஹராவென்று பாடிக் கொண்டு யாத்திரை கிளம்பும் புண்ணியந்தான் உண்டாகியது.

ராமலிங்கத்தின் ஆதிகால வாழ்க்கையின் மகிமை என்ன? இப்போதுள்ள நிலைமையின் கதி என்ன? தாங்கள் மிகவும் கொழுத்த செல்வவந்தர்களாக இருக்கும்போது ஏழைகளைக் கண்டால் எப்படி கொடிய தொத்து வியாதியைப்போல் வெறுத் தார்களோ, அம்மாதிரி தங்களை இப்போது வெறுப்பார்களே என்னும் உணர்ச்சி முதலில் குப்பம்மாளின் மனத்தில் தான் குத்தியது. அம்மாதிரி தோன்றியபோது நெருப்பின்மீது நிற்பதுபோன்ற பெரும் வேதனையும் சங்கடமும் உண்டாகி அவளைச் சித்திரவதை செய்தது. முன்னர் நடந்த வழி பின்னர் தேய்ந்து தானே ஆகவேண்டும்.

வீடு வாசல் போயிற்று. நிலம் புலம் கோவிந்தா! நகை நட்டுகள் ஹரோ ஹர! நிற்கவும் நிழலின்றி நடுத்தெருவு நாராயணவென்ற கதி வந்த பிறகு பாவம், உயிர் வாழவும் திவான் பகதூர் விரும்பவில்லை. தற்கொலை செய்துகொள்ளவும் அவர்கள் இருவரும் துணிந்தார்கள்.

திவான் :—குப்பு! நம் தலைவிதி ஒரு காலத்தில் இப்படி யாகுமென்று யாரேனும் நினைத்தோமா! எப்படியோ மேன் மையாக வாழ்ந்து விட்டு, இனிமேல் நான் கேவலமான புழுவைப் போல் உயிர் வாழ விரும்பவில்லை. மகாதேவன் மகா புத்திசாலி; அவன் எப்படியாவது தன் மக்கள் மனைவியைக் காப்பாற்றுவான்.

அருணுசலம் நமக்கு கால் சறுக்கல் உண்டாவதற்கு முன்பே அதையறிந்து மாமியார் வீட்டோடு போய் ஒட்டிக்கொண்டு நம்மைப்பற்றிச் சிந்திப்பதையும் மறந்தான். இனி உனக்கு நானும், எனக்கு நீயுந்தான் கதி. நான் தற்கொலே செய்து கொள்வதாக நிச்சயித்து விட்டேன். அம்மாதிரி நான் போய் விட்ட பிறகு உன் கதி அதோகதியாகி விடுமே என்று உனக்கு இதைத் தெரிவிக்கிறேன்." என்ற பொழுது குப்பம்மாளின் குலே நடுங்கியது. தேகம் சிலிர்த்து முகமே விகாரப்பட்டு குரலில் ஒரு பயங்கரமும், நடுக்கலும் உண்டாகி "ஐயோ! தற்கொலேயா! என்று ஒரு அலறல் அலறினுள்.

திவான்பகதூரின் ஆவி துடித்தது. என்ன செய்வார் பாவம்! இவர்கள் வீற்றிருக்கும் இடமோ அழகிய தாமரைகள் நிறைந்த தடாகத்தின் ஓரம். காலமோ இரவு. நிலவு மங்கி இருள் சூழவாரம் பித்தது. அன்று நள்ளிரவு வரையில் அவ்விடத்திலே இருந்து குளத்தில் விழுந்துவிட வேண்டுமென்று திவான்பகதூர் நிச்சயம் செய்துகொண்ட பின்னரே மனேவியிடம் தெரிவித்தார். இருவரும் குழம்பிப் போய் தத்தளித்துக் கொண்டிருந்த சமயம் சற்று தூரத்திலிருந்து வெகு இனிமையாகப் பாடும் கானம்ருதத்தின் ஒலி திவான்பகதூரின் காதில் விழுந்ததும், அவரது மதி மயங்கி கவனம் முற்றும் அப்பாடலின்மீது சென்று லயித்தது. "குப்பு! பாடலேக் கேளு." என்றார்.

வஸந்தா ராகம். சாபு தாளம்.

பல்லவி

ஜீவன் உனது அல்லவே தெரிவாய் நெஞ்சே! (ஜீ)

அநுபல்லவி

மூவடி அளந்தோனின் சேவடிக்கே சொந்தம் (ஜீ)

சரணம்

நஞ்சைக் கொடுத்தோனே நஞ்சை மாற்றுங் கர்த்தன்
நெஞ்சி லறிந்திடாமல் நஞ்சுண்டு சாதற்கே
அஞ்சாது துணிந்தாலும் அவனன்றி உன்னுவி
பஞ்சாய்ப் பறந்திடாது பாபமே சூழ்ந்திடும் (ஜீ)

"ஆகா! என்ன உண்மையான விஷயம்! என்ன அருமையான பாடல். ஆம்; ஆம். முற்றிலும் உண்மையே! இந்தப் பாடலைப் பாடிக்கொண்டு செல்லும் புண்ணியாத்மா யாரோ தெரியவில்லையே? கானத்தின் இசை குறைந்து தூரத்தில் செல்வதைப் பார்த்தால் யாரோ பாடிக்கொண்டு போவது போலல்லவா இருக்கிறது!

குப்பு! பாடலைப் பார்த்தாயா! நாம் மூடத்தனமாக ஆதியில், சகலமும் நம்முடையது; எல்லாம் நம்முடைய சொத்து என்று கர்வித்தோமே! இப்பாடல் நமக்கு போதிக்கும் உண்மையைப் பாரு. மனிதனுடைய உயிர்கூட அவனுக்குச் சொந்தமல்ல. அவனைப் படைத்த கர்த்தனின் சொத்து. அதை மாய்க்கக்கூட உனக்கு அதிகாரமில்லை என்று த்த்வோபதேசம் செய்கிறது பார்த்தாயா? நாம் செய்துள்ள எண்ணிலாத பாவம் போதும். நம்முடைய இறுதி காலத்தையாவது பாபம் செய்யாது புண்ணியத்திலேயே கழிப்போம். தற்கொலை என்பதை இம் மட்டுடன் விட்டுவிட்டு எம்பெருமானடி தொழுது கொண்டே நாம் தீர்த்த யாத்திரையும், க்ஷேத்திர யாத்திரையும் செய்து கொண்டு கண்காணாது போய் விடுவோம்" என்று முடிவு கட்டிக் கூறினர். குப்பம்மாளும் அதை ஆமோதித்தாள். பிறகு இருவரும் எழுந்து சென்றார்கள்.

பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பதுபோல், மகன் அருணசலம் அவர்களுக்கு கஷ்ட காலம் வருவதையறிந்து மாமியார் வீடு சென்றுவிட்ட பின்னர், அவனை ஒரு தரமாவது பார்த்துவிட்டுப் போகவேண்டுமென்ற தடுக்கவியலாத ஆசை குப்பம்மாளின் இதயத்தில் பொங்கி எழுந்தது. ஆசை வெட்கமறியாது என்ற பழமொழிப்படிக்கு இருவரும் மகனைப் பார்க்கும் பொருட்டு சம்மந்தி வீட்டிற்குச் சென்றார்கள்.

"அருணசலம் இருக்கிறானா?" என்று குப்பம்மாளே முதலில் கேட்டாள். "உள்ளே போய் பாருங்கள்" என்று வேலைக்காரன் சொல்லியதும் உள்ளே சென்றார்கள். இவர்களைப் பார்த்த

உடனே அருணாசலத்தின் மாமியார் இவர்களை இன்னாரென்று தெரிந்துகொண்டுங் கூடத் தெரியாதவர்களைப் போலவே நடித்து, "யாரது? எங்கோ பார்த்தது போலிருக்கிறதே. ஓகோ! சம்மந்தியம்மாளா? அடடா! இங்கு காலை வைத்தால் தொத்து வியாதியல்லவோ தொத்திக்கொள்ளும்? இது வியாதி பிடித்தவர்களுக்கொப்பான தரித்திரர்கள் வாழும் இடமல்லவா? தவறிப்போய் வந்துவிட்டீர்களா?" என்று குத்தலாகக் கேட்டாள்.

குப்பம்மாளுக்குப் பதில் கூறவே முடியவில்லை. மனத்தில் அவமானமும் துக்கமும் வாள் கொண்டு அறுக்கிறது. அவளால் அங்கு நிற்கக் கூட முடியவில்லை. அதே சமயம் அந்த வீட்டில் கிராமபோன் இசைத்தட்டில் பட்டினத்தாரின் நாடகம் பாடிக்கொண்டிருந்தது. "தன்வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்; காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே; ஊருஞ் சதமல்ல; உற்றார் சதமல்ல உற்றுபெற்ற பேருஞ் சதமல்ல" என்ற வேதாந்தப் பாடல் பாடிக்கொண்டிருப்பதைக் காதில் கேட்டவுடன் இவர்களுக்கு பின்னும் அவமானமும், தலைகுனிவும் அதிகரித்து இதயத்தைப் பிளக்கிறது.

அப்போது தான் அருணாசலம் வெளியே போய்விட்டதால் அவனையும் பார்க்க முடியவில்லை. தங்களுக்காகவே அந்த இசைத் தட்டுகள் க்ஷாத்திரங்கொண்டு பாடுவதாக எண்ணி விசனமுற்றார்கள். அவர்களுக்குப் பதில் கூறவும் முடியாமல் தலை குனிந்தபடியே முன் வைத்த காலைப் பின் வைத்துக்கொண்டு நழுவப் பார்த்தார்கள்.

இவர்களுடைய மருமகள் அங்கு வந்து "மாமீ! மாமா! நமஸ்காரம். கால வித்யாசம் எப்படி எப்படியோ மாறிவிட்டது. இந்த இடத்தை தொத்து வியாதி ஸ்தலமாக மதிக்காமலிருக்கும் பக்ஷத்தில் இங்கேயே இருந்துவிட்டுப் போகலாம்" என்று மெல்லக் கூறினாள். அதே சமயம் 10 வயது சிறுமி, பாவாடையும் சொக்காயுமாக ஓடி வந்து இவர்களைப் பார்த்து, பின் தாயாரையும் பார்த்து, "எம்மா! இவாளா நம்ப அக்காளைத் தள்ளிவெச்சா?

அடடா! அத்தகைய பெரிய செல்வச் செறுக்கு இப்போ ஒன்னும் காணமே. என் பாவாடையை விட மோசமான புடவையல்லவா கட்டி இருக்கா?

ஐயயோ! எப்ப பாத்தாலும் தொத்து வியாதி, தொத்து வியாதின்னு இடைவிடாது சொல்லிக்கொண்டிருந்தால் அதுவே தொத்திக்கொண்டு விட்டது பாவம்! எங்க அக்காவுக்கு இன்னும் நாலு மாசத்திலே ஒரு அழகான குழந்தை பிறக்கப்போறது. அப்போது கூட தொத்து வியாதி தான். அதுவும் ஒங்களுக்கு வேண்டாம். எங்களுக்குத் தான். எங்க வியாதிகள் எங்களிடமே இருக்கட்டும்" என்று உதட்டை ஆட்டியும், பிதுக்கியும் குத்தலாகக் கூறிவிட்டு நகைத்தாள்.

அதற்குமேல் அங்கு நிற்க மனம் சற்றும் சம்மதமே கொள்ளாமல் இருவரும் ஏக காலத்தில் ஆயிரம் தேள் கொட்டிய மன வேதனையுடன் திரும்பிப் பார்க்காமலும், பதில் கூறுமலும் தடதட வென்று நடையைக் காட்டிவிட்டார்கள். அதே சிறுமி கையைத் தட்டியவாறு "ஐயயோ! தொத்து வியாதி ஒட்டிக்கொள்ளும்; சீக்கிரம் போய்விடுங்கள்" என்று கத்தினுள். ஆனுல் அவள் தாயார் உடனே அச்சிறுமியைக் கண்டித்து உள்ளே அழைத்துக் கொண்டு போய்விட்டாள்.

அனுசூயா குழந்தைக்குப் பால் போட்டிக் கொண்டிருக்கையில் இருவரும் துயரம் தாங்காமல் விம்மும் மூச்சுடன் வந்தார்கள். அவர்களைக் கண்ட அனுசூயா அலறியவாறு எழுந்து "ஏன் அம்மா! ஏன் அழுகிறுய்? நான்தான் அங்கு போகவேண்டாமென்று அப்போதே சொன்னேனே, என் வார்த்தையைக் கேட்டீர்களா? பெற்றோர்களுக்கு வரும் கஷ்ட நஷ்டங்கள் மகனையும் பாதிக்கதல்லவா? அவர்களின் கஷ்டப்பட்ட சொத்துக்கள் மட்டும் நிறைய வைத்தால் அப்போது மகன் குலாவுவதற்குப் பாத்தியம் உண்டு. கால் சறுக்கும் சமயம் கைவிட்டுச் சென்றுவிட்ட மகன் ஒரு மகனு? அவனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையொரு ஆசையா? உம். எல்லாம் விதி; விதி!

அம்மா! அப்பா! நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம். கவலையும் கொள்ள வேண்டாம். நாங்கள் குடிக்கும் கஞ்சியை உங்களுக்கும் வார்க்கிறோம். நீங்கள் எந்த விதமான யோசனையுமின்றி இங்கே இருந்து ராமா, கிருஷ்ணா என்று காலத்தைத் தள்ளுங்கள். இதைக்கூட நான் செய்யா விட்டால் என் ஜென்மமே வீணாகி விடும்." என்று கெஞ்சியவாறு தாயாரைக் கட்டிக் கொண்டு தேறுதல் கூறினாள்.

மகாதேவனும், சங்கரியும் அதையே ஊர்ஜிதம் செய்து வேண்டிக் கொண்டார்கள். அனுசூயாவின் குழந்தைகள் "தாதா! பாட்டி!" என்று ஓடி வந்து கட்டிக்கொண்ட பேரானந்தத்தில் சிறிது விசனம் மறையப்பெற்றுச் சந்தோஷத்துடன் குழந்தைகளை வாரியணைத்து முத்தமிட்டார்கள்.

நாட்கள் பல கழிந்தன. மகாதேவனுக்கு எங்கு அலைந்தும் திரிந்தும் ஒரு வேலை கூட அகப்படாததால் மிகவும் வருத்தத்துடன் அன்றாடும் செய்யக்கூடிய சில சில்லறை வேலைகளைச் செய்து சில தினம் சாப்பாட்டுக்குச் சில்லறை கொண்டுவருவான். அதாவது ஓட்டலில் இட்டிலிக்கு அரைப்பது; மாவு இடிப்பது; பத்து பாத்திரங்கள் துலக்குவது. சில தினங்கள் அவைகளும் கிடைக்காமல் போய்விடும். சிறிய அச்சாபீஸ்களில் கையினால் சுற்றக்கூடிய மெஷினை பிராணனைப் பிடித்துக்கொண்டு சுற்றுவது; இம்மாதிரி கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் வயிற்றெரிச்சலை வீட்டிலும் சொல்வதில்லை.

சங்கரியம்மாளுக்கு அப்பளம் இட்டும், அவல் இடித்தும் கைக்கு ஒருவிதமான வீக்கமும், வலியுங் கண்டு கையே ஸ்வாதீனமற்று விட்டதால் அத்தொழிலும் பூஜ்யமாகி விட்டது. அனுசூயா நான்கு குழந்தைகளுக்குத் தாயாய் விட்டபடியால் அவளுக்கு மேற்படி வேலைகளைச் செய்யமுடியாது, குழந்தைகளின் தொல்லையே சரியாகி விட்டது.

மகாதேவன் படும் கஷ்டமும், குழந்தைகளை வைத்துக் கொண்டு அனுசூயா படும் கஷ்டமும் குப்பம்மாளின் மனத்தைப்

பிளந்துகொண்டே இருக்கிறது. அதோடு தாங்கள் வாழ்ந்த காலத்தில் கண்ட, மனிதர்களின் முகத்தில் விழிக்கவும் அவளால் முடியாது வருந்தி குன்றிப்போய் விட்டாள். தான் என்ன செய்வதென்று யோசனை செய்து செய்து மூளையும் குழம்பிப் போய்விட்டது.

ஒரு தினம் மகாதேவன் எங்கும் வேலையகப்படாததால், ஒரு கல்யாண வீட்டுச் சமையல்காரர்களுடன் ஒத்தாசை ஆளாகச் சென்றான். அங்கு அடுப்பிலிருந்து பாலை இறக்கும்போது அது வழக்கமில்லாமையால் தவறிப்போய் காலில் கொட்டிக்கொண்டு அப்படியே விழுந்து விட்டான். அவனை மெல்ல மற்ற சமையல் காரர்கள் தூக்கி, ஓர் ரிக்ஷாவில் வீட்டுக்குக் கொண்டுவிட்டு விஷயத்தைச் சொல்லிவிட்டுச் சென்ற பிறகே மகாதேவன் பி. ஏ. வரையில் படித்துவிட்டு இம்மாதிரி வேலைக்குப் போகும் மர்மம் அனுசூயாவுக்கும், மற்றயோருக்கும் தெரியவந்தது.

அந்தோ! இதைப்பார்த்த குப்பம்மாளின் மனமும், திவான் பகதூரின் மனமும் எப்படி இருக்கும்? பத்தி எரிந்தது. தாங்கள் ஆதிமுதல் நல்ல ஒழுங்கான மார்க்கத்தில் இருந்திருந்தால் இம்மாதிரி பணம் அழிந்து கஷ்டப்படாமலிருக்கலா மல்லவா? குழந்தைக்கும் நிறைய பணத்தைக் கொடுத்து உதவி செய்திருக் கலாமல்லவா? இப்போது நாமும் இவர்களிடம் சோற்றிற்கு வந்து உட்கார்ந்ததன் பலன் அந்த சின்னஞ் சிறு காளை - படித்த விவேகி - இம்மாதிரி கஷ்டப்பட நேர்ந்தது. ராம, ராமா! நாம் இதைப் பார்த்துச் சகிக்க என்ன பாபம் செய்தோமோ?” என்று மனம் பதறித் துடித்தார்கள்.

சங்கரியும், அனுசூயாவும் தேங்காய் எண்ணெயை காயங் களில் நிறையப் பூசி நல்ல மஞ்சளைத் தேய்த்து ஒரு வெள்ளைத் துணியில் தடவி அதன்மேல் போட்டுவிட்டு விசிறிக் கொண்டே உட்கார்ந்திருந்தார்கள்.

விடியற்காலையில் வழக்கம்போல் குழந்தைகள் தாதா, பாட்டி யிடம் கூவிக்கொண்டே செல்கையில், அவர்களைக் காணவில்லை.

"அம்மா! தாதா, பாட்டி எங்கேம்மா காணம்" என்று பெரிய குழந்தைகள் தேடிக்கொண்டு வந்தார்கள். அனுசூயாவுக்குத் திடுக்கிட்டது. அவளும் எழுந்து ஓடிப்போய் பார்த்தாள். வீடு முற்றிலும் பார்த்தால் காணவில்லை. திகிலும் பயமும் தூக்கி வாரிப் போட்டது. நேரே தட தடவென்று குளத்துக்குச் சென்றாள். அங்கு ஸ்நானம் செய்துகொண்டிருந்த ஒரு பெரியம்மாள் இவளைப் பார்த்ததும் "ஏண்டியம்மா! இன்னிக்கு இன்னும் ஒங்கம்மா ஸ்நானத்துக்கு வரல்லெயே? ஒடம்பு ஒன்னுமில்லையே?" என்றாள். அதனால் தன் தாய் அங்கு வரவில்லை என்று தெரிந்ததும், இலை பழுப்பு பொறுக்கும் ஆலமரத்தோப்பிற்கு ஓடினாள். அங்கு பழுப்பு பொறுக்கி மடியில் கட்டிக்கொண்டிருந்த சிலரில் ஒரு பாட்டியம்மாள் "என் அனுசூயா! இன்னிக்கு எலை வேண்டாமா என்ன? ஒங்கம்மாவும் வரல்லே, ஒன் மாமியாரும் வரல்லெயே.? எங்கேயாவது சாப்பாடா?" என்று கேட்டாள்.

அனுசூயாவுக்கு இன்னும் திகில் பிடித்துக்கொண்டது. இரண்டிடத்தைத் தவிர தன் தாயார் வேறு எங்கும் போவதே கிடையாதே. எங்கு தான் போயிருப்பாள்? அப்பா எங்கே பார்க்கலாம்?" என்று கூறிக்கொண்டே, அவர் போகும் வழக்கமான கோயிலுக்குச் சென்றாள். அங்கே அனேக பக்தர்கள் ஸரஸ்வதி பீடத்தில் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு பகவத்கீதை, ராமாயணம், பாகவதம், ஸஹஸ்ர நாமம், தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல்கள் முதலியவற்றை தம் தம் போக்காகப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

தன் தகப்பனார் உட்காரும் தூண் பக்கம் காலியாகவிருந்தது கண்டு, அங்குள்ள ஒரு பன்னிரண்டு திருமண்காப்பு ஸ்வாமியை நோக்கி "ஸ்வாமீ! இங்கு உட்காருவாரே ஒரு பக்தர் அவர் வரவில்லையா?" என்று கேட்டாள்.

அதற்கு அந்த ஸ்வாமி "அவர் இன்னும் வரக் காணவில்லை. ஒருகால் உடம்பு அசவுக்யமோ என்று எண்ணினேன்" என்றார்.

இதற்குமேல் அப்பேதைப் பெண் எங்கே பார்ப்பாள்? ஏதோ மன வருத்தத்தினால் மனமுடைந்து எங்கேயாவது போய் விட்டார்களோ? அன்றி அப்பாவி ஜமீந்தார்தான் ஏதாவது சதி செய்துவிட்டானோ என்ற பெருத்த திகிலும், வேதனையும் சூழ்ந்து விட்டது. கண்ணீர் ஆறாய்ப் பெருகத் துயரப் பதுமைபோல் வீடு திரும்பினாள்.

12-வது அதிகாரம்

காம வெறியனின் கண்மூடித் தாண்டவம்

"துங்காராம்! எப்படி எப்படி கர்வித்தவர்களின் கதி எல்லாம் எப்படியாய் விட்டது பார்த்தாயா? அன்று நடக்கவேண்டிய கல்யாணம் நின்று பல வருடங்களாகி விட்டபோதிலும், என் மனத்தில் என்னவோ இப்போதே நடக்கும் உணர்ச்சியே தாண்டவமாடுகிறது. திவான்பகதூரும் மிஸஸூம் போன இடம் தெரியாது எப்படியோ மறைந்துவிட்டார்களாமே. ஆமாம். அவர்களுக்கு இது போதாது; இன்னமும் வேண்டும். பெண்ணைக் கொடுப்பதாகக் கூறி வஞ்சகத்ரோகம் செய்து என்னை ஏமாற்றிய வகை சும்மா போகுமா?" என்று மைனர் ஜமீந்தார் மீசையை முறுக்கினார்.

ராவணனுடைய மந்திரி ராவணனுக்கு என்ன உபதேசம் செய்தான்? அந்த இனத்தின் சம்மந்தமுள்ள மைனரின் துன் மந்திரி அதற்குச் சரியான தாளம் போட்டு "ஆமாம்னுக்கா! அந்த திவான்பகதூருக்கு மட்டும் இல்லே. அந்த திமிர் படைத்த கழுதை அனுசூயா இருக்கிறாளே, அவள் அன்றாடம் பிண்டத் திற்குத் திண்டாடணும். மகாதேவன் - பேரைப் பாரு - தரித்திர தேவன்! அந்த மூதேவிக்கு எங்குமே வேலையகப்படாமல் செய்து கொண்டே வந்தால், அந்த கழுதைக்கு புத்தி வந்து ஒரு வேளை நம்ப காலிலேயே வந்து விழுந்து, உங்களை வேண்டினாலும் வேண்டு

வான்" என்று முடிப்பதற்குள், மைனர் அளப்பரிய ஆச்சரியமும் சந்தோஷமும் கொண்டு "அச்சா! உன் புத்தியல்லவோ புத்தி! ஆம். அதுதான் சரியான யோசனை. அம்மாதிரி செய்து தான் புத்தி வரும்படிக்குச் செய்யவேண்டும். இப்போது அவன் என்ன செய்கிறுன்?" என்றுன்.

கங்காராம் :—செய்வதாவது? தரித்திரத்திற்குத் தக்கபடி ஒரு அரை டஜன் குழந்தைகள் இருக்கிறார்போலே தெரிகிறது. தாயார் ஒரு கை நொண்டி; திவான்பகதூரும் சம்சாரமும் காணுத வேதனையால் பெண் மெலிந்து விட்டாளாம். அந்தப் பயலுக்கு எங்கேயோ ஒரு கண்ணுடி ஷாப்பில் வேலையாம். 18 ரூபாய் சம்பளமாம். இத்தனை மூதேவிகளுக்கு அது எம்மட்டும்? தங்கம் போல் உங்களுக்கு மாலை இட்டிருந்தால் அவள் ஓர் ராணியைப் போல் இருக்கலாமல்லவா? தரித்திரத்திற்கு இந்த பதவி ஒட்டுமா?- என்று மைனரின் கள்ள உணர்ச்சியைப் பின்னும் தூண்டி விட்டான்.

மைனர் :—பாரேன்; நானும் எத்தனையோ விதத்தில் அந்தப் பயலை மிரட்டியும், தடபுடல் செய்தும் பார்த்ததெல்லாம் வீணுகி விட்டது. மத்தியில் பாழாப்போன பாரிச வாயு வந்து என்னை மட்டும் கீழே தள்ளாதிருந்தால் இத்தனை நாளுக்குள் அந்த கர்வம் பிடித்த சிறுக்கியை எப்போதோ என்னடிமையாகச் செய்திருப் பேன். அந்த சனியன் பிடித்த வாயுவாலல்லவோ நான் ஊரை விட்டும் வெளியில் சென்று, வருடக் கணக்கில் வைத்தியனிடம் அகப்பட்டுச் சாக நேர்ந்தது. இப்போது தான் என்ன முழுகி விட்டது? வாய் என்னமோ சரியாகப் பேச வந்துவிட்டது. கால் சற்று இழுப்பாக இருக்கிறது. நானென்ன நடக்கப் போவது மிஞ்சிப்போய் விட்டது. கார் இருக்கிறது; நீ இருக் கிறுய். அவ்வளவுதானே!

கங்காராம் :—ஆம். எஜமான்! அவ்வளவுதான். ஆனல் நீங்கள் இன்னும் சற்று பலம் வந்த பிறகு இக்காரியத்தில் ப்ரவே சித்தால் பாதகமில்லை. ஏனெனில் அந்த அல்பர்களால் ஏதேனும்

ஆபத்துக்கள் எதிர்பாராது நேருமாயின் சமாளிக்கும் சக்தி வேண்டாமா! அதற்காகத்தான் சொல்லுகிறேன்.

மைனர் :—ஹூம். அது கெட்டது கழுதை. என்னைக் காப்பாற்றிக் கொள்ளவா எனக்குத் தெரியாது? ஆகட்டும். ஒரு கை பார்த்துக் கொள்கிறேன். என் முகத்தில் காரி உமிழ்ந்த வளையும், என்னைப்பற்றியே என்னெதிரில் லெக்சர் செய்த பாதகியையுமா நான் விடுவேன்? ஒன்று அவள் எனக்கு அடிமையாக வேண்டும். அல்லது என் கையினாலேயே அவளை நான் எமனுலகம் அனுப்ப வேண்டும். இவ்விரண்டில் ஒன்று செய்யாவிட்டால் என்னுவி நிற்காது. இதனால் என்னுயிர் போவதாயினும் பாதகமில்லை. சரி; இன்று முதல் நீதான் எனக்குச் சகாயம் செய்ய வேண்டும். இந்தா ஒரு 50 ரூபாய் நோட்டு. நமது மில்லின் நிர்வாகம் எப்படி இருக்கிறது?" என்றான்.

கங்காராம் :—அதற்கென்ன சார்! தடபுடலாக நடக்கிறது. ஆங்காங்கே இந்த காங்கிரஸ் கூட்டத்தார்கள் செய்யும் கதர் ப்ரசாரத்தினால் நம் சரக்கு அவ்வளவாக செலவாகவில்லைபோல் தோன்றுகிறது. இந்த பாழுங் கூட்டத்தை வேரறுத்துவிட்டால் இனிமேல் பயமே இல்லை.

மைனர் :—அப்படியா! அந்த கட்சி திரும்பவும் தலை தூக்கி ஆடுகிறதா? அப்படியாயின் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படாமல் எப்படி காப்பது?—என்று உதட்டைப் பிதுக்கிக் கொண்டு பெரிய யோசனையிலாழ்ந்தார். அச்சமயம் பத்திரிகைக்காரப் பையன் பத்திரிகையைக் கொண்டு கொடுத்துச் சென்றான். கங்காராம் அதைப் புரட்டிப் பார்க்கையில் ஏதோ பெருத்த ஆச்சரியத்தைக் கண்டு விட்டவன்போல் பேசத் தொடங்கி "சார்! பாருங்கள்!" என்று ஒரு பத்தியைக் காட்டினான். மைனரும் ஆத்திரமும், ஆவலுங் கூடிய முகபாவத்துடன் படிக்கவாரம்பித்தான்.

"நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு, வடக்கு வீதியிலுள்ள பிள்ளையார் கோவிலுக்கு முன்பு உலகம்

போற்றும் உத்தம த்யாக மூர்த்தியாம் காந்தியடிகளின் பிறந்த தினத் திருவிழாவை முன்னிட்டு ஓர் மாபெருங் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் "காந்தியடிகளும் கதரின் சிறப்பும்" என்ற விஷயத்தைப் பற்றி ஸ்ரீமதிகள் நளினாட்சி தேவி, சாரதா தேவி, அனுசூயா தேவி, ஸ்ரீமான்கள் முத்துகுமரன், மகாதேவன், கிருஷ்ண மேனன், சிவப்ரகாசம் முதலிய இன்னும் பல பெரியார்கள் பேசுவார்கள். எல்லோரும் வரும்படி கோரப்படுகிறது."

என்றதைப் படித்ததும் மைனரின் மீசை துடித்தது. பல்லை நறநறவென்று கடித்தான். ஓகோ! சோற்றுக்கு அடதாளம் போடும் மூதேவிகளுக்கு இந்த வேஷம் போடுவதுதான் ஒன்று குறைவா? இம்மாதிரி வேஷம் போட்டு யார் யாரை காக்காய் பிடிக்கப் பார்க்கிறார்களோ தெரியவில்லை! இவர்கள் பவிஷுக்குக் காங்கிரஸ் ப்ரசாரம் வேறு கேடா? இருக்கட்டும்" என்று முணுமுணுத்தார்.

* * * *

"அனுசூயா! இன்று கூட்டத்திற்கு அந்த குண்டோதர மைனர் ஜமீந்தார் வந்திருந்ததை நீ கவனித்தாயா? அவன் அத்தனை சாகப் பிழைக்கக் கிடந்தானாமே. அவன் உடம்பு ஏதாவது வாடிற்றா பார்த்தாயா? இன்று அவன் முகத்தில் சாணியறைந்ததுபோல் நீ கதரைப்பற்றி உயர்வாகப் பேசியது வெகு ரஸமாயிருந்தது. அப்போதெல்லாம் நான் அவனது முகத்தை கவனித்தேன். எள்ளுங் கொள்ளும் வெடித்தது. உன்னை அப்படியே எரித்து விடலாமாவென்றும் தோன்றியிருக்கும். அவைகளை நீ கவனித்தாயா?" என்று மகாதேவன் கேட்டான்.

அனுசூ:—ஓ! நன்றாகப் பார்த்தேன். பார்த்த பிறகுதான் பின்னும் ஆவேசத்துடன் பேசினேன். சோழியன் குடுமி சும்மா ஆடாது என்றதுபோல் அவன் பழைய ஆத்திரத்தை மனத்தில் வைத்துக்கொண்டு தான் கூட்டத்திற்கு வந்தானேயன்றி

அவனுக்கு காங்கிரஸ் பக்தி வந்துவிட்டதோ? படுபாவிக்கு வந்த பாரிச வாயுவு ஏன் குணமாயிற்று என்று தோன்றுகிறது. அப்படியே அவஸ்தைப்பட்டாலும் அவனுக்கு புத்தி வரவில்லையே! என் தாய் தகப்பனாரின் மதியீனத்தினால் இத்தனை தூரம் ஆபத்து விளைந்தது. இன்னும் என்னென்ன விளையப் போகிறதோ! தெரியவில்லை. இதுவே கவலையாயிருக்கிறது. நீங்கள் ஆபீஸிலிருந்து சீக்கிரம் வந்துவிடுங்கள். இராக் காலத்தில் தனியே போகவேண்டாம்.” என்றாள்.

மகாதேவனுக்கு கண்ணாடி சாமான்கள் விற்கும் ஷாப்பில் வேலையாயிருக்கிறதில் வரும் வருமானத்தைக் கொண்டு மிகவும் எளிய வாழ்க்கையை - ஏன் கஷ்ட ஜீவனமன்றே கூறலாம் - அனுசூயா சாமர்த்தியமாக நடத்திக் கொண்டு வருகிறாள். சற்று வயதான மூத்த குழந்தைகள் அடிக்கடி தன் தாயை நோக்கி “எம்மா! பக்கத்து வீட்டு பார்வதம் நல்ல நல்ல பாவாடை சொக்காய் எல்லாம் போட்டிண்டிருக்கா! தினம் ஏதோ ஒரு பக்ஷணம் திங்கரா. நம்மாத்திலே எம்மா அந்த மாதிரி இல்லே.” என்று கேட்கும்போது அனுசூயாவின் வயிற்றில் சுரீலென்று வேதனை செய்யும்.

வெகு சாமர்த்தியமாய் “பாப்பா! நான் தான் முன்னேயே சொல்லி இருக்கேனே. நெறைய பாவத்தைச் செய்திருக்கிறவா தான் இப்படி இருப்பா. குசேலர் கதையை நீங்கள் எத்தனை தரம் கேட்டிருக்கிறீர்கள்? அந்த 27 குழந்தைகளுக்கும் பெருமாள் நெறய பணங்கொடுத்து காப்பாத்தினதுபோல் நீங்கள் இப்போது இப்படி இருந்தால் பிறகு உங்களையும் காப்பாத்துவார்” என்று தேறுதல் கூறுவாள்.

மகாதேவனுக்கு அன்று அந்த மைனரைப் பார்த்த பிறகு வீட்டில் தனியாக விட்டு வந்த குழந்தைகள்மீதும், அனுசூயாவின் மீதுந் தான் ஞாபகம். துஷ்ட மைனரால் எந்த சமயம் என்ன நடக்குமோ, என்ன ஆபத்து வருமோ வென்று பயந்தவாறு ஆபீஸில் வேலை செய்வான். ஒரு தினம் ஆபீஸில் ஒருவன் சில

கண்ணாடி சாமான்கள் வாங்குவதற்கு வந்தான். அவைகளில் எலக்ட்ரிக் பல்புகளும், டோம்களும், ஷேட்களும்கூட இருந்ததால் சுமார் 50 ரூபாய்க்குச் சாமான்கள் வாங்கினான்.

மகாதேவனே எல்லாவற்றையும் எடுத்து ஒருபுறம் அடுக்காக வைத்தான். மீண்டும் சில சாமான்கள் எடுப்பதற்கு ஒரு பெஞ்சியின் மீது ஏறினான். இதுகாறும் எத்தனையோ தடவை ஏறியிருந்த பெஞ்சி இன்று அதன்மேல் ஏறியதும் தடாரென்று சறுக்கி விழுந்து கீழே இருந்த கண்ணாடி சாமான்களும் இன்னும் பக்கத்தில் இருந்தவைகளும் நொறுங்கிவிட்டன.

ஆனால் பக்கத்திலிருந்த பீரோவை அவன் பிடித்துக் கொண்டதால் அடி படாது சமாளித்துக் கொண்டான். இந்த எதிர்பாராத நஷ்டத்திற்கு யார் ஜவாப்தாரி? வந்திருக்கும் ஆள் "ஐயயோ!" என்று பெரியதாகச் சத்தம் போட்டதினாலும் கண்ணாடிகள் நொருங்கிய ஓசையினாலும் கடையில் கும்பல் கூடி விட்டது. வந்த வஞ்சகன் அந்த சிறு பெஞ்சியின் காலின் அடியில் கொட்டைப் பாக்கை ரகஸியமாக வைத்ததை கடைக்காரனும் மகாதேவனும் அறிவார்களா? பழி மூட்டை மகாதேவனின் தலைமீது சாய்ந்தது. கடைக்காரனுக்கு உண்டாகிய பேராத் திரத்தினால் தலை கால் தெரியாமல் எழுந்து மகாதேவனின் கன்னம் புடைக்கும்படியாக இரண்டு அறைகள் பளீர் பளீர் என்று விட்டான்.

"ஐயோ! பாழும் வயிறு வளர்ப்புக்காக 18 ரூபாய் சம் பளத்தில் அடிமை வேலையிலிருக்கும் விதியில், அடியும் இன்ன வேண்டுமென்று என் பாழும் தலையெழுத்து இருந்ததா?"வென்ற துக்கம் மகாதேவனின் தொண்டையை அடைத்துக் கொண்டது. "எஜமான்! இதுபரியந்தம் நான் ஏறவில்லையா! இன்று எப்படி விழுந்துவிட்டதென்று எனக்கே தெரியவில்லை எஜமான்!" என்று எத்தனையோ தாழ்ந்த குரலில் கேட்டும், அதை எஜமான் காதிலேயே வாங்கவில்லை.

"ஆகா! இந்த சாமான்கள் எல்லாம் சட்டி பானை என்று பார்த்தாயா? சுமார் நூறு ரூபாய்க்கு மேல் நஷ்டத்தை

யுண்டாக்க நீ வேண்டுமென்று செய்த காரியந்தான் இது. உனக்கு உடம்பில் ஜாக்கிரதை இருக்கவேண்டாமா! இம்மாதிரி அஜாக்ர தையாகச் செய்த வேலைக்கு யார் ஜவாப்தாரி? நீ தான் இந்த நஷ்ட ஈடு செய்யவேண்டும். இனிமேல் நீ இந்த வேலைக்கே லாயக் கில்லை. நீ கட்டியிருக்கும் டிபாஸிட்டு ரூபாய் 50, இம்மாத சம்பளம் 18 ஆக 68 ரூபாய் போய்விட்டது. இன்னும் மிச்ச முள்ளதற்கு என்ன வழி சொல்லுகிறாய்? உம். உடம்பில் பயம் கூச்சம் கிடையாது" என்று கூவி தா, தை என்று குதிக்கிறான்.

நிரபராதியான மகாதேவன் என்ன செய்வான்! இந்த பேரிடி போன்ற விதிக்கு எவ்விதந் தான் பதில் கூறுவான்? என்ன பதில் கூறித் தான் இந்த விபத்தில் ஜெயிக்க முடியும்? கண்ணில் தாரை தாரையாக ஜலம் பெருகுகிறது. அட்டகாசமாக சாமான் வாங்க வந்த பெரிய மனிதனும் இந்த தடபுடலில் கலந்துகொண்டு "ஓ! நான் சுபமாக ஒரு கல்யாணத்திற்கு சாமான்கள் எடுத்து வைத்தது அபசகுனம் போல் உடைந்து விட்டதால் நான் இங்கு வாங்கமாட்டேன்" என்று முடுக்காகவே கூறிவிட்டுப் போய்விட்டான்.

சென்ற ஆசாமி தெருக்கோடியில் நின்றிருக்கும் மோட் டாரில் ஏறிக்கொண்டான். "எப்படி காரியம்?" என்று ஒருவித மான குறும்புப் பார்வையுடன் மைனர் கேட்டார். வந்த ஆசாமி கட கடவென்று சிரித்துக்கொண்டே "கேட்கவேண்டுமா? கொட்டைப்பாக்கின் பிரயோகம் கொட்டைப்பாக்கு உருளும் நேரத்தில் முடிந்துவிட்டது. ஆசாமி விழிக்கிறான். கண்ணீர் கொட்டுகிறது. கடைக்காரன் சுடச் சுட செவிட்டில் அறைந்து விட்டான்" என்றான். மைனருக்கு ஏதோ பிரமாதமான பெரிய காரியத்தைச் சாதித்து விட்டதுபோல் நகைப்பும், சந்தோஷமும் பொங்கியது. அந்த மனிதனின் முதுகில் தட்டி, ஒரு 50 ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தான்.

கடையில் கதி கலங்கி நிற்கும் மகாதேவனை முதலாளி படுத்தும் பாட்டில் அவன் என்ன தான் செய்வான் பாவம்!

"ஐயா! நானோ பரம ஏழை. நீங்கள் கொடுத்து வந்த சொல்ப வருமானத்தினால் நாங்கள் காலங் கழிப்பவர்கள். என் கையில் வேறு காலணா கூட இல்லை. என்னை மன்னிக்கவேண்டும். நான் குழந்தை குட்டிக்காரன். டிபாஸிட்டு பணத்தை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். மிச்சமுள்ள 50 ரூபாய்க்கு, அசல் விலை போட்டுப் பார்த்தால் பாதி கூடத் தேறாது. மாதம் 5 ரூபாயாக சம்பளத்தில் பிடித்துக்கொண்டு என்னை ஆதரிக்கவேண்டும். நான் குழந்தை குட்டிக்காரன்" என்று கெஞ்சினான்.

முதலாளி :—செய்த காரியத்திற்கு மன்னிப்பதா? இன்னமும் உன்னை வைத்துக்கொள்வதா? இனி அந்த பருப்பு இங்கு வேகாது. பேசாமல் பணத்திற்கு வழி சொல்லிவிட்டுப் போய்விடு. இனி இக்கடையில் காலை வைக்காதே.

மகா :—நான் என்ன வழி செய்ய முடியும்? என் கையில் ஒத்தை பைசா கூட கிடையாது. எஜமான் மனமிரங்கி மன்னித்தால் தான் உண்டு. இல்லையேல் இங்கேயே சாகவேண்டியதுதான்.

கடை :—ஓகோ! பெரிய வேதாந்தம் பேசுகிறாயே! உன் சம்சாரத்தின் உடம்பில் நகைகளாக மினுக்கும் பொருளைக் கொடுத்து ஈடு செய்வதற்கு மனமில்லையோ! வா, உன் வீட்டிற்கு நானும் வருகிறேன்.

மகா :—எஜமான்! அவள் உடம்பில் ஒரு நகைகூட கிடையாது. வேண்டுமாயின் தாராளமாக வந்து வீட்டையே சோதனை போட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள். ஆக்ஷேபனை இல்லை. காலணா மதிக்கும் சொத்திருந்தாலும் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கண்ணீர் பெருகியபடியே கூறினான்.

கல்லினும் கொடிய சித்தமுடைய கடைக்காரன் கடையை, குமாஸ்தாவைப் பார்த்துக்கொள்ளச் செய்துவிட்டு மகாதேவனுடன் புறப்பட்டு விட்டான். வீதியிலிருந்த கூட்டத்தினர் சிறிதும் தவறாமல் தம் தம் தொழிலைச் செய்வதே போல் மனம் போனபடி பேசிக்கொண்டே போனார்கள். மகாதேவனுக்காக கடைக்காரனும் நடந்தே வந்தான். இவர்கள் அந்த தெருவை

தாண்டிக்கொண்டு போவதைக் காரிலிருந்தே பார்த்துக்கொண்டிருந்த மைனரும், மற்றவனும் கலகலவென்று நகைத்தார்கள். இந்த நகை மனித வர்க்கத்தின் காதில் விழவில்லையாயினும், எல்லாம் வல்ல இறைவனின் காதில் விழாமலில்லை.

அனுசூயா அப்போது தன்னிரு பெரிய குழந்தைகளையும் உட்கார வைத்துக்கொண்டு தமிழ் பாட புத்தகத்திலிருந்து சிறிய பாடங்களைச் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தாள். குழந்தைகளும் ஆசையாக அதைப் படித்துக்கொண்டிருந்த சமயம், மகாதேவன் கண்ணீர் பெருகியவாறு கடைக்காரனுடன் வருவதைப் பார்த்ததும் அனுசூயாவுக்கு ஒன்றுமே தோன்றாமல் விழித்துக் கொண்டே பதைக்கப் பதைக்க எழுந்து நின்றாள்.

குழந்தைகளும் பதறிப்போய் "ஏம்மா அழறே!" என்று கேட்டுக்கொண்டே ஓடிவந்து காலைக் கட்டிக்கொண்டார்கள். அனுசூயா பதைத்துப்போய் "என்ன சமாச்சாரம்? ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே மகாதேவனருகில் வந்தாள். சங்கரியும் மகாதேவனின் கையைப் பிடித்துக்கொண்டு "என்னடா தம்பி! என்ன சமாசாரம்? என்ன நடந்தது?" என்றாள்.

மகாதேவன் வாய் திறப்பதற்கு முன்பு கடைக்காரனே விரைத்த பார்வையுடன் "நடந்ததாவது? என் கடையிலுள்ள கண்ணாடி சாமான்களில் 100 ரூபாய் பெறுமானவைகளை இவருடைய அஜாக்ரதையால் உடைத்துவிட்டார். என் சொத்து மட்டும் வீதியில் கிடக்கும் மண்ணோ? அதற்கு நஷ்ட ஈடு வாங்குவதற்கு வந்தேன். எனக்குச் சேர வேண்டிய 32 ரூபாயிக்கு இப்போது பெறுமான சொத்து கொடுக்கவேண்டும்" என்று கண்டிப்பாய்க் கேட்டான்.

அனுசூயாவின் வயிறும் மனமும் பற்றி எரிந்தது. விஷயம் இன்னதென்று விளங்கிவிட்ட பின்னர் மகாதேவனை இன்னும் கேட்டு என்ன தெரியவேண்டும்? அவன் முகத்தை ஏற இறங்கப் பார்த்தாள். மகாதேவனும் புலம்பியபடியே "அனுசூயா! எல்லாம்

நம் கால விதி. எல்லாம் என் தலையெழுத்து. காலக்கூத்தின் கொடுமையால் நேருவதை எல்லாம் அனுபவித்துத்தானே தீரவேண்டும். நாம் பரம ஏழை என்று எத்தனை சொல்லியும் அவர் கேட்கவில்லை. நம் வீட்டிலுள்ள சகலத்தையும் காட்டி விடு; பார்த்துக்கொள்ளட்டும்" என்று கூறின பரிதாபம் அனுசூயாவின் இதயத்தை உருக்கியது.

மகா உத்தமியும் புத்திசாலியுமான அனுசூயா, கடைக்காரனை நோக்கி "ஐயா! உங்களிஷ்டப்படியே இதோ இந்த இடத்திலுள்ள எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளுங்கள். எங்களுக்கிருப்பது இச்சிறிய விடுதியொன்றுதான்" என்று கூறிக்கொண்டே அங்கு கிடந்த இரண்டு ஓட்டைப் பெட்டிகளைத் திறந்து அவற்றிலிருந்த கந்தல் சொக்காய், குழந்தைகளின் உடை, தன்னுடைய புடவை முதலியவைகளை எடுத்து உதறிக்காட்டினாள். உள்ளே சமையல் பாத்திரங்களெல்லாம் சட்டி பானைகளாகவே இருப்பதைக் கண்டான்.

அறை முற்றும் பார்த்ததில் கந்தலான சில பாய்களும், தலையணைகளும், ஒரு ஓட்டை கயிற்றுக் கட்டிலும் இருந்தன. பானைகளை எல்லாம் அந்த அல்ப கடைக்காரன் திறந்து திறந்து கையை விட்டுப் பார்த்தான். ஒரு படி அரிசி கூட அதில் கிடைக்கவில்லை. பருப்பு, புளி, மிளகாய் முதலிய எல்லாவற்றையும் பார்த்துவிட்டு "சட்! தரித்திரம் தாண்டவமாடுகிறது. பீடை பிடித்த வீடு. மூதேவி!" என்றெல்லாம் திட்டிக்கொண்டே அனுசூயாவை உற்றுப் பார்த்தான்.

அனுசூயா வெகு சாமர்த்தியமாக யூகித்துக்கொண்டு "ஐயா! இவைகள் பூராவும் கண்ணாடி வளையல்கள். இதோ இத் தாலி சரடும் நூல் சரடே. வேறு உங்களுக்கு ஈடு செய்ய காலணா பித்தளை கூட என்னிடமில்லை." என்று கூறினாள். இதற்கும் பிசினாரி அவன் என்ன செய்ய முடியும்? உள்ளே மேல் கூரையில் இலைக் கட்டுகள் தைத்து கோட்டையாகக் கயிற்றில் கட்டி தொங்கியதைப் பார்த்தான். "ஓ! இது என்ன வியாபாரமா! அந்த கட்டுகளை

எடு. வீட்டுக்கு நாலு நாளைக்கு சாப்பாட்டுக்காவது ஆகட்டும்" என்று கூறிக்கொண்டே நான்கு கட்டுகளையும் தானே அவிழ்த்து எடுத்துக் கொண்டான்.

குழந்தைகள் "அம்மா! நமக்கு சாப்பிட இலை இல்லையே!" என்றன. அவற்றின் வாயை அனுசூயா பொத்தி விட்டாள். இலைக் கட்டுடன் வெளியே போகும்போது மகாதேவனை முறைத்துப் பார்த்து "இனிமே என் கடைப்பக்கம் கால் எடுத்து வைக்காதே. ஜாக்ரதை "என்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

அப்போதும் தெருக் கோடியில் மோட்டாருடன் நின்றிருந்த மைனர் இலைக்கட்டோடு செல்லும் கடைக்காரனைப் பார்த்து, கட கடவென்று நகைத்தார். ஆனால் கடைக்காரனுக்கு அப்போதிருந்த ஆத்திரத்தில் அந்த சப்தம் காதிலேயே விழவில்லை. விரைக்க விரைக்க இலைக்கட்டுடன் ஓடுவதைப் பார்த்தால் பெரிய வேடிக்கையாகத் தோன்றியது.

183012

சொற்ப காபிகளே கைவசமிருக்கின்றன!

நீங்கள் இன்னும் படிக்கவில்லையா?

அனாதைப் பெண்

அல்லது

கனிந்த காதலர்

பேசும் படமாக வெளிவரும்,

உள்ளத்தை உருக்கும் உயரிய நாவல்

விலை	சந்தா நேயர்கட்கு
ரூபாய் 1—4—0	ரூபாய் 1—0—0

உடனே முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

குழந்தைகளின் குட்டிச் சண்டை

●

"ஹி ஹீ ஹீ! நன்னா இருக்கடி கல்யாணப் பெண்ணாட்டமா இருக்கியே"

●

தமாஷாய்த் தான் இருக்கிறது

இந்த குழந்தைகள் யார்?—

படத்தைப் பார்த்தால் தெரிகிறது

●

வருகிறார்

●

மைனர்

ராஜாமணி

●

வடுவூர் கதை

ராஜா சாண்டோ டைரெக்ஷன்

OLYMPIC PICTURES., No. 33. Jones St, Broadway, Madras

"Jaganmohini" Vol. XIV—No. 11 Regd. No. M. 2210

தலை

வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்

Printed & Published by V. M. Parthasarathy at "Jaganmohini" Press,
26, Car St., Triplicane, Madras.